பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 22 சனிக்கிழமை 09.10.2021 கதிர் 338

### இனி இது ரகசியம் அல்ல!

இனியென்ன? வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏற ஆரம்பித்து விடும்.

மாகாண சபைத் தேர்தல் ஏற்பாடு என்று அறிவிக்கப்பட்டதும் அவரவர்கள் தத்தமது தீர்மானப் படி காய்களை நகர்த்தத் தொடங்கி விடுவர். தொடங்கி விடுவர் ☞ 2

## மேலும் 38 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 38 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் ☞ 12

## மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை ஒக். 21 வரை நீடிப்பு

### ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதன்படி ஒக்டோபர் 21ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை தொடரும் என்று கொரோனாத் தடுப்புச் செயலணி தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் ☞ 12



## நேற்று தொற்று 746

இலங்கையில் நேற்று 746 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய ☞ 2

# வடக்கின் முதலமைச்சர் வேட்பாளர் மாவைதான்!



### மீண்டும் அடித்துக் கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, ஒக்ரோபர் 09

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமானால் எங்கள் முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராஜாதான்.

– இப்படி நேற்றும் திரும்பவும் உறுதிபடக் கூறியிருக்கின்றார் இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன். ☞ 2



## மாவிலாற்றைக் கைப்பற்றிப் பிரபாகரனுக்கு முதலாவது பாடம் கற்பித்தவர் உங்கள் தந்தை

### யொஹானிக்குப் பொன்சேகா வாழ்த்து



இலங்கையின் இளம் பாடகி யொஹானி டி சில்வாவின் தந்தை பிரசன்ன சில்வா, மாவிலாற்றைக் கைப்பற்றி பிரபாகரனுக்கு முதலாவது பாடத்தைக் கற்பித்தவர் என்று முன்னாள் இராணுவத்தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யொஹானிக்கு வாழ்த்துத் தெரிவித்து சரத் பொன்சேகா தனது பேஸ்புக் ☞ 12

## 18 - 19 வயது மாணவர்களுக்கு 21ஆம் திகதி முதல் தடுப்பூசி!

நாட்டில் 18, 19 வயது பிரிவு பாடசாலை மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது எனக் கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் ☞ 12



## கட்சியிலிருந்து என்னை வெளியேற்ற நீங்கள் யார்?

### சஜித் தரப்பிடம் டயனா கமகே கேள்வி



மழைக்கு ஒதுங்குவதற்காக வீட்டுக்குள் இடமளித்தால் என்னையே வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சிக்கின்றனர் என்று தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்தார்.

வீட்டின் உண்மையான உரித்தைக் கொண்டுள்ள ☞ 12

## இணுவில் கொள்ளை; மேலும் மூவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.இணுவிலில் நள்ளிரவில் வீடு புகுந்து கைக்கோடாரிகளைக் காண்பித்து அச்சுறுத்தில் 21 பவுண் நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரை யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி இணுவிலில் உள்ள ☞ 2



### வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல வியாபார நிலையத்திற்கு மொத்த விற்பனையாளர்களும், இவ் நிறுவனத்திற்கு தகைமையுள்ள முகாமையாளரும் விரும்பத்தக்கது.

i) விற்பனையாளர்
1. 5 வருட முன் அனுபவம் உள்ளவர்.
2. கிளிநொச்சி வதிவிடம் உள்ளவர்.
3. கணனி செயலாற்றல் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
4. வயது எல்லை 28 45 வருடங்கள்

ii) முகாமையாளர்
1. A/L Qualification கட்டாயம்
2. 10 வருட தொழில் முன் அனுபவம்
3. கணனி செயல்முறைத்திட்டம் கட்டாயம் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
4. வயதுஎல்லை 35 - 45 வருடங்கள்

தொடர்புகள் 0717354308

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்ன, தொடங்கியே விட்டனர்.

'அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்ப காலியாகும்?' - என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

நம் தலைவர் ஒருவருக்கு பதவி சொகுசுக் கதிரை இல்லாமல் இருக்க முடியாது. அப்படி இருந்தால் முதுகு அரிப்பெடுக்கும் போல...!

மாகாண சபைத் தேர்தல் எண்டதும் திரும்பவும் முதலமைச்சர் கனவிலை தள்ளாடாத் தொடங்கி விடுவார். அவரை அந்தக் கனவுப் பக்கம் தள்ளி விட்டால், அவரின் தலைமைப் பதவிக்குத் தான் கண் வைக்கலாம் என்பது சிற்றரசரின் எதிர்பார்ப்பு.

சிற்றரசர் தமக்குக் கட்சித் தலைமை முடி சூட்டுவதற்காக - தாம் முழு அரசராவதற்காக - காய் நகர்த்துவது தப்பில்லை. இப்போது இருப்பவரிலும் பார்க்க அவர் எவ்வளவோ better. ஆகையால் வந்துவிட்டுப்போகட்டும்.

அதுவல்ல விடயம், அதற்காக, முதலமைச்சர் பதவியை மீண்டும் குழப்பியடிக்க அவர் வழி பண்ணுவது தமிழினத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகம் - சின்னத்தனம் - அற்ப வேலை - என்பது என் கணிப்பு.

முதல் தடவை, சொல்லச் சொல்ல ஏற்க மறுத்து, பிடிவாதம் பிடித்து, வெளியில் இருந்து தெரியாதவரைக் கூட்டி வந்து பெருந்தலைவர் குசும்பு பண்ணினார். எல்லாம் குழம்பிப் போனதுதான் மிச்சம். தமது அந்தப் பெருந்தவறை பெருந்தலைவர் இன்னும் ஒப்புக் கொள்ளவேயில்லை. ஒப்புக் கொள்ளவே மாட்டார். அது பெட்டியோடு போகும் விடயம் என விட்டுவிடுவோம்.

அடுத்த ரவுண்டும், இந்த சிற்றரசரின் பேரரசராகும் இலட்சியத்தினால் முதலமைச்சர் பொறுப்பு முட்டாள்தனமாகிப் போய்விடும் போல தெரிகின்றது.

சும்மாவா சொன்னார் தந்தை செல்வா, இனித் தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று...?

இத்தகையோரை மக்கள் பிரதிநிதிகளாக்கும் மக்களுக்கு இப்படியான தலைவர்கள்தான் மீண்டும் மீண்டும் கிடைப்பார்கள்.

மக்கள் திருந்தாத வரை, அவர்கள் தலையெழுத்தையும் யாரும் மாற்றமுடியாது, அவர்களின் தலைவர்களையும் யாரும் மாற்ற முடியாது. அவ்வளவுதான்.

* * *

ஓரிரு தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாடாளுமன்றில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது என்று குறிப்பிட்டேன் அல்லவா? பத்து எம்.பிக்களும் பங்குபற்றினர்.

ஆரம்பத்திலேயே ரெலோவின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனா (கோவிந்தன் கருணாகரன்) ஒரு பெரிய குற்றச்சாட்டை சிறிதரன் எம்.பி. மீது அடுக்கினார்.

யாழ்ப்பாணத்துத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த சிறிதரன் எம்.பி. தன்னைப் பற்றி மோசமாக விமர்சித்தார் என்றார் ஜனா.

''புலி இருந்திருந்தால் ஜனாவை எம்.பியாக விட்டிருக்க மாட்டார்கள், அவர் பொதுவாழ்விற்குவரவேகூடாது, வரவிடவே கூடாது என்று புலிகள் தீர்மானித்திருந்தனர், புளொட் கூட கூட்டமைப்புக்குள் வந்திருக்க முடியாது என்றெல்லாம் விமர்சித்தார்" - என்றார் ஜனா.

தலைவர் சம்பந்தன் சிறிதரனைப் பார்த்தார்.

"ஓம். நான் அப்படித்தான் கூறினேன். அதுதான் உண்மை. உண்மையைக் கூற நான் ஏன் பின்னிற்க வேண்டும்?" - என்றார் சிறிதரன்.

"அப்படியானால் உங்களுக்கு நடந்தவற்றை நாங்கள் கூறட்டுமா?" - என்று தொடங்கிய ஜனா, சிறிதரன் தொடர்பில் புலிகள் எடுத்த நடவடிக்கை என சில வற்றை முன்வைத்தார். அந்தக் குற்றச்சாட்டுகளை, பத்திரிகை தர்மம் கருதி நான் 'சென்ஸார்' பண்ணி விட்டேன். இங்கு குறிப்பிடவில்லை.

"ஓம்! நீங்கள் தாராளமாக அப்படிச் சொல்லிப்பாருங்கள். மக்களுக்கு உண்மை தெரியும். நீங்கள் கூறுபவற்றை மக்கள் நம்பமாட்டார்கள்." - என்றார் சிறிதரன்.

"சரி, சரி பழையவற்றை கிளறி எடுத்துப் பேசி, கூட்டமைப்பைக் குலையப் பண்ணி விடாதீர்கள். இத்துடன் நிறுத்துங்கள்" -என்று கூறி விடயத்தைச் சமாளித்தார் சம்பந்தன்.

"மாகாண சபை, அதற்கான தேர்தல் ஆகியவற்றை ஒட்டி நாங்கள் இந்தியாவுக்கு சில தெளிவுபடுத்தல்களை செய்ய வேண்டியுள்ளது. அதற்காக ஒரு கடிதம் தயாரித்து அனுப்ப வேண்டும். சுமந்திரனிடம் கூறியுள்ளேன். சுமந்திரன் கடிதம் தயாரா?"- என்று கேட்டார் சம்பந்தன்.

"எழுதி விட்டேன். இறுதி செய்து உங்களுக்கு அனுப்புகிறேன்." - என்றார் சுமந்திரன்.

"ஐயா. அந்தக் கடிதத்தை எங்களுக்கும் ஒரு தடவை பார்வைக்கு அனுப்புங்கள்." - என்றார் செல்வம்.

சம்பந்தன் ஐயா, சுமந்திரனைப் பார்த்தார்.

"ஓம், நான் அனுப்புகிறேன். ஆனால் சம்பந்தன் ஐயாவின் கடிதத்தைப் பார்த்து வாசித்த பின்னர் அதை மூலையில் வைத்துவிட்டு, வேறு ஆள்களோடு சேர்ந்து வேறு கடிதத்தில் ஒப்பமிட்டு அனுப்பக் கூடாது" - என்று செல்வத்தைப் பார்த்து ஒரு 'ஷௌட்' கொடுத்தார் சுமந்திரன்.

அவ்வளவுதான். ஜெனிவாவுக்கு விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தாவுடன் சேர்ந்து ஒப்பமிட்டு ரெலோ, புளொட் உறுப்பினர்கள் கடிதம் அனுப்பிய விடயம் அங்கு விவாதப் பொருளாகச் சூடாக வெடித்தது.

சந்தர்ப்பத்திற்குக் காத்திருந்த சுமந்திரன் செமத்தியாகக் கொடுக்க சுருண்டார் செல்வம்.

சம்பந்தன் ஐயாவின் கடித நகல் சுமந்திரனிடம் இருந்து தாமதமாக வந்தமையால் நேர்ந்த விபரீதம் அது என்ற மாதிரிக் கூறி சமாளிக்க முனைந்தார் செல்வம்.

"இல்லை. நான் எல்லாப் பதிவுகளையும் வைத்திருக்கிறேன் - நேர வரிசைப்படி. ஐயாவின் கடிதம் கிடைத்து நான்கு, ஐந்து மணி நேரத்தின் பின்னர்தான் மற்றையோருடைய கடிதத்தில் நீங்கள் ஒப்பமிட்டு அனுப்பியுள்ளீர்கள். விவரத்தை விலாவாரியாகத் தரவா?" - என்றார் சுமந்திரன்.

சம்பந்தன் ஐயா, இரு தரப்பையும் சமாளித்து கூட்டத்தை முடித்து வைத்தார்.

இந்த ஒட்டுப் போடும் சமாளிப்பு எவ்வளவு காலத்துக்குத் தொடரும் என்பதுதான் கேள்வி.

- மின்னல் -

## இணுவில் கொள்ளை;...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வீடொன்றுக்குள் நள்ளிரவு புகுந்த மூவர் கைக்கோடாரிகளைக் காண்பித்து வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தில் 21 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையில் மறுநாள் 4ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரும் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அந்நிலையில், சந்தேகநபர் ஒருவர் தனது சட்டத்தரணி ஊடாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் பகல் சரணடைந்தார். தன்னிடமிருந்த 13 தங்கப் பவுண் நகைகளைப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைத்திருந்தார்.

குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரிடமிருந்தும் 2 கைக்கோடாரிகள் மற்றும் 6 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, சந்தேகநபர்கள் மூவருக்கு உதவியளித்து கொள்ளைச் சம்பவத்துக்கு உடந்தையாகவிருந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரும் அவர்களுக்கு உதவியதாக ஒருவர் என நால்வரைப் பொலிஸார் தடுப்புக்காவலில் வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 24 ஆயிரத்து 937 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 421 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 79 ஆயிரத்து 182 ஆக அதிகரித்துள்ளது.

## 18 -19 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்ததாவது:-

குறித்த வயதுகளையுடைய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலேயே தடுப்பூசி வழங்கப்படும். வைத்தியர்களின் கண்காணிப்பின் கீழ் தடுப்பூசி வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

பாடசாலைக்குச் செல்லாத 18 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலுள்ள பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி வயது பிரிவினருக்குப் பைசர் தடுப்பூசியே வழங்கப்படவுள்ளது - என்றார்.

## வடக்கின் முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொழும்பு தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று நேரடிப் பேட்டி வழங்கிய ஸ்ரீதரன் அதிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

தேர்தல் ஒன்று நடத்தப்படுமா ஆனால் அதை எதிர்கொள்ள கூட்டமைப்பு தயாரா, கூட்டமைப்பினுடைய வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்த நொடி அல்லது நாளை கூட தேர்தல் அறிவிக்கப்படுமானால் அதை எதிர்கொள்வதற்கு நாங்கள் தயார். அதற்கான அனைத்து ஏற்பாடுகளுடன் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நான் பல தடவை குறிப்பிட்டிருக்கிறேன். மாவை சேனாதிராஜாதான் எங்களுடைய முதலமைச்சர் வேட்பாளராக இருக்க வேண்டும். அதற்கு பல காரணங்கள் கூறி இருக்கிறேன்.

முதலிலே வெளியிலிருந்து புலமையாளர்களை நாங்கள் கொண்டு வந்தோம். அவர்கள் வெளியில் இருந்து வந்து அரசியலைப் படித்து, இந்த விடயங்களை கையில் எடுத்து நடத்துவதற்கு நீண்ட நாள்கள் செலவாயின. ஐந்து ஆண்டுகள் அதில் ஓடி முடிந்து விடுகின்றன.

ஆகவே முதலமைச்சராக இருக்க வேண்டியவர் ஓர் அரசியல் தலைவர் என்பது என்னுடைய தனிப்பட்ட எதிர்பார்ப்பு. அது தொடர்பில் கட்சிக்குள் முழு ஐக்கியமான ஒருமைப்பாடு இருக்கின்றது. மாவை சேனாதிராஜாவைத் தெரிவு செய்வதற்கு ஒருமித்த நிலைப்பாடு கட்சிக்குள் முழுமையாக இருக்கின்றது. கூட்டமைப்புக்குள் இருக்கின்ற எல்லா கட்சியினரும் - எவரும் - மாவை சேனாதிராஜாவிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பது முக்கியமான விடயமாகும். அது தொடர்பில் பல விதமான விடயங்களும் ஏற்பாடுகளும் பேசப்பட வேண்டும் என்பதில் எங்களுக்குள் கருத்து வேறுபாடில்லை. ஆனாலும் அவர்தான் எங்களின் முதலமைச்சர் வேட்பாளர். - என்றார் சிறிதரன் எம்.பி.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களில் காணப்படும் பாவனையில் இல்லாத கட்டிடம், மற்றும் பாவிக்கமுடியாத / பாவனைக்குத் தேவைப்படாத பொருள்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏல விற்பனைக்குரிய கட்டிடங்கள் மற்றும் பொருள்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழக பொறியியலாளர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பின்வரும் தினங்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 03.00 மணிவரை குறித்த நாட்களில் பார்வையிடலாம்.

**ஏலவிற்பனை நடைபெறும் இடங்கள்.**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாட்கள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|
| பிரதான வளாகம் | • பழைய உணவகக் கட்டிடதொகுதி கூரை தொடக்கம் நிலமட்டம் வரை சுத்தமாக அகற்றுதல் வேண்டும் (*தளப்பரப்பு 12,000 சதுரஅடி, கூரை-4,500 சதுரஅடி*)<br>• கன்னார் கூரைத்தகடுகள்<br>• கட்டிடப்பொருட்கள்<br>• இரும்புப்பொருட்கள்<br>• அலுமினிய மின்வடங்கள்<br>• விறுகுக் குவியல்கள் | 14.10.2021<br>15.10.2021<br>18.10.2021 | 27.10.2021<br>புதன்கிழமை<br>மு.ப. 09.30மணி |
| மருத்துவபீடம்<br>விளையாட்டு மைதானம் | • இயந்திரப்பகுதி<br>• விறகுக் குவியல்கள் | 14.10.2021<br>15.10.2021<br>18.10.2021 | 27.10.2021<br>புதன்கிழமை<br>மு.ப. 11.00 மணி |
| சித்த மருத்துவத்துறை | • பெரிய கல்லுகள்<br>• கட்டிட இடிபாடுகள்<br>• விறகுக் குவியல்கள் | 21.10.2021<br>22.10.2021 | 26.10.2021<br>செவ்வாய்க்கிழமை<br>மு.ப. 10.00 மணி |

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தொடக்கக் கட்டணமாக **ரூபா 3000.00**ஐ பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் **97000044001846** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்து சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

சித்திபெறும் ஏலதாரர் உரிய தொகையினை பணமாக உடன் செலுத்தி பொருள்களை முழுமையாக உடன் எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

பழைய உணவகக் கட்டிடத்தொகுதியை வெற்றிபெறும் ஏலதாரர் உரிய தொகையுடன் **மீளளிப்பு செய்யக் கூடிய வைப்புத்தொகையாக ரூபா 100,000.00** ஐயும் சேர்த்து பணமாக உடன் செலுத்தி குறித்து ஒதுக்கப்பட்ட தினங்களுக்குள் முழுமையாக அகற்றுதல் வேண்டும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# அமைச்சர்களுக்கு வீடுகளை அமைக்கின்றது அரசாங்கம்!

## தங்குமிடமின்றி தவிக்கும் 8 லட்சம் குடும்பங்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்காக வீட்டு வளாகங்கள் அமைக்கப்படுகின்ற நிலையில், சுமார் எட்டு லட்சம் இலங்கையருக்கு வசிக்க வாழ்விடங்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

60 லட்சம் குடும்பங்கள் வசிக்கும் இலங்கையில் 52 லட்சம் குடும்பங்கள் மாத்திரமே ஏதேனும் ஒரு வகையான வீடுகளை வைத்திருப்பதாகவும், சுமார் எட்டு லட்சம் குடும்பங்கள் கடுமையான வறுமையில் வாழ்வதோடு, வீடு என அழைக்கக்கூடிய பாதுகாப்பான இடமின்றி வாழ்கின்றன என, மனித நேயத்துக்கான வழ்விடம் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் யூ ஹ்வா லீ தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பது அரசின் பொறுப்பு என்றாலும், முன்னைய அரசாங்கங்களுக்கு பதில் சொல்லும் எண்ணம் இல்லை, நீர்கொழும்பில் இடம்பெற்ற, இணையத்தளம் ஊடான உலக வாழ்விட தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட யூ ஹ்வா லீ, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சுதந்திரம் அடைந்து 72 ஆண்டுகளுக்கு பின்னரும், இலங்கை இன்னும் வளர்ந்து வரும் நாடாகக் காணப்படுவதாகவும், குறைந்தபட்சம் எந்த அரசாங்கத்தாலும், இந்த நாட்டின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில், மாதிவெலவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 200 வீடுகளை அமைக்க முன்வந்துள்ள நிலையில், யூ ஹ்வா லீ இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 4 ஆம் திகதி உலக வாழ்விட தினத்தை யொட்டி, நீர்கொழும்பு மக்கள் ஐக்கிய அமைப்பு, கம்பஹாவில் வீடற்ற மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒரு கடிதத்தைக் கையளித்துள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வசதியான வீட்டை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் சௌபாக்கிய நோக்கு கொள்கையின் ஒரு விசேட அம்சமாகும். எங்கள் பிரச்சினையை நீங்கள் புரிந்து கொள்வது எளிதாக இருக்கும் என நாம் நம்புகின்றோம், - என அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நிரந்தர வீடு இல்லாத நாங்கள், சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ளோம். எங்கள் பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும் போது எங்களுக்கு நிரந்தர முகவரி இல்லாததால் எங்கள் விண்ணப்பங்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகின்றன. நிரந்தர முகவரி இல்லாததால் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரசு வழங்கும் மானியங்களை இழக்கின்றோம்.

இந்த வீட்டு பிரச்சினை 1979 முதல் 40 வருடங்களாக நீடிப்பதாக நீர்கொழும்பு மக்கள் ஐக்கிய அமைப்பின் செயற்பாட்டாளரான சுபத்திரா குமாரி குறிப்பிட்டுள்ளார்.

'நாங்கள் அனைவரும் குறைந்த வருமானம் உள்ளவர்கள். எனவே, பொருளாதார நெருக்கடி உள்ளது. நாங்கள் வாடகை செலுத்த முடியாததால், பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் பல குடும்பங்களுடன் வாழ்கின்றமை ஒருவருக்கொருவர் தனியுரிமையைப் பாதிக்கிறது.

'3 அல்லது 4 குடும்பங்கள், அதாவது, 10-15 பேர் ஒரே வீட்டில் வசிக்கும் போது, பல மன வேதனைகள், சண்டைகள் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை இழப்பது உள்ளிட்ட பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கிறது.' - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வட மாகாணத்தில் போருக்குப் பின்னர் வீடற்ற நிலையில் பலர் வாழ்ந்து வருகின்றனர் என கிராமிய தொழிலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. '7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதி முகாம்களிலோ அல்லது உறவினர் வீடுகளிலோ அல்லது வாடகை வீடுகளிலோ குடியேற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றனர். அவர்களில் சுமார் 800 பேர் இன்னும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

மயிலிட்டி, காங்கேசன்துறை துறைமுகங்கள் மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்தி அறிவித்து, தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் விடுவிக்கப்படவில்லை, அவை இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன 'என கிராமப்புற தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஏ. . இம்பநாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.



## ஹரிஸ் போன்ற இனத்துவேசம் கொண்டவர்களை சிறுபான்மை மக்கள் இனங்கண்டு ஓரங்கட்டவேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் போன்ற இனத்துவேசம் கொண்டவர்களை சிறுபான்மை மக்கள் இனங்கண்டு ஓரங்கட்டவேண்டும் என மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உறுப்பினர் மே.வினோராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராசமாணிக்கத்தின் 47 ஆவது சிரார்த்த தினம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியிலுள்ள சி.மூ.இராசமாணிக்கம் சிலைக்கருகில் சுகாதார நடைமுறைகளைப் பேணியவகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் முகாமையாளர் விமலநாதன் மதிமேனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்முனைதென்எருவில்பற்றுபிரதேசசபைஉறுப்பினர் மே.வினோராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சி.மூ.இராசமாணிக்கத்தின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பு கடந்த எட்டு வருடங்களாக மக்கள் நலன் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இந்த ஆண்டும் பல செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் முகாமையாளர் விமலநாதன் மதிமேனன் தெரிவித்தார்.

இம்முறை கிழக்கு மாகாணசபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் எனவும் அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லையெனவும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உறுப்பினர் மே.வினோராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் போன்ற இனத்துவேசம் கொண்டவர்களை சிறுபான்மை மக்கள் இனங்கண்டு ஓரங்கட்டவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ரயில்வே சேவைகளை மீள ஆரம்பிக்க முடிவு

ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்கத் தயாராக உள்ளோம் என ரயில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சுகாதார வழிகாட்டல்கள் விரைவில் வெளியிடப்பட்டால், எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீமெந்து தட்டுப்பாடு காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மக்கள்

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக காணப்படும் கடும் சீமெந்து தட்டுப்பாடு காரணமாக நிர்மாணத் துறையைச் சேர்ந்த பலர் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். சீமெந்து தட்டுப்பாடு காரணமாக கட்டுப்பாட்டு விலையான 950 ரூபாவைத் தாண்டி ஆயிரத்து 400 ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபா என்ற அதிகாரபூர்வமற்ற விலைக்கு ஒரு மூடை சீமெந்து விற்பனை செய்யப்படுகின்றது. சீமெந்து தட்டுப்பாடு காரணமாக நிர்மாணத்துறையில் தொழில் புரியும் மேசன்கள், உதவியாளர்கள் உட்பட பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

சீமெந்தை இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறையாக இருப்பதே சீமெந்து தட்டுப்பாட்டுக்கான காரணம் என இலங்கையின் பிரதான சீமெந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் சீமெந்து தேவையின் 60 வீதம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதுடன், 40 வீதம் இறக்குமதி செய்யப்படுகின்றது. டொலர் தட்டுப்பாடு காரணமாக பல நிறுவனங்கள் சீமெந்து இறக்குமதியை நிறுத்தியுள்ளமை இந்த தட்டுப்பாட்டுக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மாகாணத் தேர்தல் நடக்குமா?

மீண்டும் மாகாண சபைத் தேர்தல் பற்றிய பேச்சு கிளம்பியுள்ளது.

நாட்டில் மாகாண சபை என்ற அதிகாரப் பரவலாக்கல் முறைமை ஒன்று அரசமைப்புப் புத்தகத்தில் உண்டு. ஆனால் அதற்கான தேர்தல்களை நடத்தி, மக்கள் பிரதி நிதிகளிடம் அந்த அதிகாரங்களைக் கையளிக்கும் ஏற்பாடு – சட்டம் – ஏதும் கடந்த நான்கு வருடங்களுக்கு மேல் நாட்டில் இல்லை.

இது தொடர்பில், புதிய சட்டங்களை விரைவில் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியோடு நான்கு வருடங்களுக்கு முன்னர் இருந்த சட்டத்தை விலக்கியது ரணிலின் நல்லாட்சி அரசு. புதிய சட்டம் வரவும் இல்லை. பழைய சட்டம் புதுப்பிக்கப்படவுமில்லை.

அதனால் மாகாண சபைத் தேர்தல்களை கடந்த நான்கு வருடங்களுக்கு மேல் நடத்தப்படாமல் இழுபடுகின்றன.

மக்கள் தங்களது இறைமையைப் பிரயோகிக்கும் முறைமையில் ஒன்று மாகாண சபைத் தேர்தல், அந்த உரிமையை மறுப்பது மக்களின் இறைமையை மறுப்பதற்கு ஒப்பாகும் என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய பின்னரும் கூட இந்தத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆளும் தரப்புகளினால் முயற்சி எடுக்கப்படவேயில்லை.

ரணிலின் அன்றைய நல்லாட்சி அரசுக்கு – மாகாண சபைத் தேர்தலில் மக்களுக்கு முகம் கொடுப்பதற்குத் துணிவேயிருக்கவில்லை. அதனால் ஏதோ சாக்குப் போக்குக் காரணத்தைக் குறிப்பிட்டு, அது தொடர்பான தேர்தல் சட்டத்தை ரத்துச் செய்து, தப்பிக் கொண்டது அது.

அதன்பின் ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டி ஆட்சியைப் பிடித்த மொட்டுக் கட்சியும் மிகக் குறுகிய காலத்தில் தனது ஆட்சி முறைமை காரணமாக மக்கள் செல்வாக்கை கணிசமாக இழக்க, அதைத் தொடர்ந்து அதுவும் மாகாண சபைத் தேர்தலை உடன் எதிர்கொள்ளத் திராணியில்லாமல் மெல்லப் பின்னடிக்கத் தொடங்கியது.

எதிரணியில் இருந்த போது மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று சூடு கிளப்பிய மொட்டுக் கட்சியினர் இப்போது அதிகாரத்துக்கு வந்ததும், அந்தத் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்ய அதிகாரமும் வலிமையும் இருந்தும் கூட அதைச் செய்யாமல் பின்னடித்து வருகின்றனர்.

மொட்டு கட்சியின் ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து இரண்டு வருடங்களாகுகின்றன. நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மொட்டுக் கட்சியினர் முழு அதிகாரத்தையும் வலிமையாகக் கைப்பற்றி ஒரு வருடம் தாண்டி விட்டது.

ஆனால், மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முதுகுத் திராணி மொட்டுக் கூட்டணிக்கு இன்னும் கூடத் தெளிவாக வரவில்லை என்பதுதான் உண்மை.

இப்போது சர்வதேச அழுத்தம் – குறிப்பாக இந்தியாவின் நச்சரிப்பு – இருப்பதால் அதைச் சமாளிப்பதற்கு மாகாண சபைத் தேர்தல் என்ற பேச்சு, வாய் வீச்சாக எடுத்து விடப்பட்டிருக்கலாம் என்றே கூறப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கூட மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மாகாண சபைத் தேர்தல்களை இப்போதைக்கு நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்று கூறியமை மறந்து விடக்கூடியதல்ல.

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துவதற்கான சட்டங்கள் விரைந்து நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பின்னர், அதனடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முழு அதிகாரமும் தேர்தல் ஆணையத்துக்கு வந்த பின்புதான், அத்தேர்தல் நிச்சயம் நடக்கும் என நம்பலாம். அதுவரையில் மாகாண சபைத் தேர்தல்கள் இதோ நடக்கப்போகின்றது, அதோ நடக்கப்போகின்றது என்ற அறிவிப்புகளை எல்லாம் 'பீலா' விடும் கதைகளாவே கருதமுடியும், கருத வேண்டும்.

# மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசார முறைப்படி நடத்துக!

## மக்கள் காங்கிரஸ் வலியுறுத்து



பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசார முறைப்படியே தொடர்ந்து நடத்த வேண்டும் என மக்கள் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கட்சியின் தவிசாளர் அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.ஹீட், சட்டத்துறைபணிப்பாளர்ருஷ்திஹபீப்ஆகியோர் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துகொண்டு, தேர்தல்கள் சீர்திருத்தம் தொடர்பாக மக்கள் காங்கிரஸ் கட்சியினுடைய பிரேரணையை முன்வைத்தனர்.

அதில் பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத்தேர்தல் விடயங்களில் கட்சியின் நிலைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தியமையுடன், விரிவான நீண்ட நேர கருத்தாடல்களையும் மேற்கொண்டனர்.

மேலும், பொதுத்தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் விகிதாசார முறைப்படி தற்போது நடைமுறையில் உள்ளவாறு நடத்த வேண்டும் என்ற வாதங்களும் மக்கள் காங்கிரஸ் கட்சியினரால் அங்கு முன்வைக்கப் பட்டன.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் ஆரம்பகாலத்தில் இருந்த விகிதாசார முறைப்படியான தேர்தல் முறையையே கடைப்பிடிக்க வேண்டும் என்றும் இப்பொழுது இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முறை நாட்டுக்கு உகந்தது அல்ல என்றும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை பெண்களுக்கான பிரதிநித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதோடு, விசேடமாக புலம்பெயர்ந்தவர்களினுடைய வாக்குரிமை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்ற விடயம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அதில் முக்கியமாக வடக்கு மாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டு, புத்தளம் உள்ளிட்ட இதர மாவட்டங்களில் வாழ்ந்துவரும், அதாவது இன்னும் தமது சொந்த ஊரிலே குடியேறுவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கும் விசேட சலுகை அடிப்படையில், அவர்கள் தங்கியிருக்கும் மாவட்டங்களிலுள்ள முகாம்களில் இருந்தே, அவர்கள் விரும்பிய தமது சொந்த மாவட்டத்தில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளும் இந்தத் திருத்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் மன்னாரில் பணிப்புறக்கணிப்பு போராட்டம்



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதியர்கள் மற்றும் பிரதேச வைத்தியசாலை சிற்றூழியர்கள், நேற்று (வெள்ளிக்கிழமை) காலை பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரை இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் தாதியர் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வரும் நிலையில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மன்னார் மாவட்டத்தில் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக இந்த இக்கட்டான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சேவையை கருத்தில் கொண்டு வழங்க வேண்டிய உரிமைகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை 41 தொழிற்சங்கங்கள் இணைந்து முன்னெடுத்து வருகின்றன. ஆகவே, கடந்த காலங்களில் கொரோனாவிற்காக வழங்கப்பட்ட 7 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை, கொரோனா காலம் முடியும் வரை பணியாளர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் கவனம் செலுத்தி உரிய தீர்வை உடனடியாக பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை மேற்கொண்டனர்.

குறித்த போராட்டத்தினால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்கள், பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**அங்கம் - 100**

**ந.வித்தியாதரன்**

சிவநாயகம் ஐயாவினால் பெரிதும் மதித்து சிலாகிக்கப்பட்டவர் கம்ப கலாநிதி பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன். இந்தக் 'கம்ப கலாநிதி' பட்டத்தை அவருக்கு வழங்கியவரே சிவநாயகம் ஐயாதான்.

1982 இல் கொழும்பு கம்பன் விழாவில் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் ஆற்றிய உரையை செவிமடுத்துப் புளகாங்கிதம் அடைந்த சிவநாயகம் ஐயா தானாகவே மேடையேறி ஒரு பாராட்டு சிற்றுரை நிகழ்த்தி இந்த பட்டத்தைப் பேராசிரியருக்கு வழங்கினார் என்று குறிப்பிட்டிருந்தேன். திருகோணமலையில் நான் ஏற்பாடு செய்திருந்த ஒரு கம்பன் விழாவில் பேராசிரியர் கம்பகலாநிதி இராதாகிருஷ்ணன் பேசினார். அவர் அங்கு ஒரு கேள்வி எழுப்பினார்.

'யார் கவி? யார் மகாகவி?' என்பதுதான் அவரது கேள்வி. பார்க்க முடியாததை - கேட்க முடியாததை - சொல்லில் வடிக்க முடியாத உணர்வை - யார் தனது கவிதை மூலம் பார்க்க வைக்கின்றானோ, கேட்க வைக்கின்றானோ அல்லது உணர வைக்கின்றானோ அவன் கவிஞன் என்றார் அவர்.

அப்படியானால் யார் மகா கவி? யாருடைய கவிதையிலேயே எதிர்பார்க்கவே முடியாத கற்பனை வளம் (Unexpected imagination) நிறைந்து கிடக்கின்றதோ அவன்தான் மகாகவி என்றார் கம்ப கலாநிதி. அந்தக் கவிஞனின் கவிதையைத் தொடத்தொட, உரைக்க உரைக்க புதிதுபுதிதாக அர்த்தங்கள் அதற்குள் இருந்து வெளிப்படும் என்றால் அவனே மகாகவி. இப்படியெல்லாம் இந்தக் கவிஞன் சிந்தித்துதான் அந்தக் கவிதையை புனைந்தானா என்று சந்தேகிக்கக் கூடிய அளவுக்கு



புதிய புதிய அர்த்தங்கள், ஆழங்கள், விடயங்கள் அந்த கவிதைக்குள் இருந்து வெளிப்படுமானால் அந்தக் கவிதையை எழுதியவன் மகாகவிதான் என்றார் கம்ப கலாநிதி.

சரி இந்த விடயம் இப்போது எதற்கு? பத்திரிகைத்துறையில் இமயம் என உயரத்தைத் தொட்டவர்கள் பலர் இருக்கின்றனர். இந்த தொடரில் நானே பலரை தொட்டுக் காட்டி இருக்கிறேன். இவர்களில் எஸ்.டி.எஸ். சிவநாயகம் ஐயா மட்டும் ஊடக ஜாம்பவானாக எவ்வாறு உயர்கின்றார்?

இங்குதான் கம்ப கலாநிதி இராதாகிருஷ்ணன் கூறிய விடயம் வருகின்றது. எஸ்.டி.எஸ். ஐயாவின் எழுத்துக்கள், ஆக்கங்கள், பதிவுகள், நடவடிக்கைகள், செயற்பாடுகளை இப்போது கூர்ந்து நோக்கி ஆராயும்போதுதான் அவரது திறமை, புலமை, புத்திசாதுரியம், தீர்க்கதரிசனம், செயற்றிறன், கூர்ந்த மதிநுட்பம் பற்றிய புதிய புதிய அவதானிப்புகளை எல்லாம் கண்டுபிடிக்கவும் அறியவும் முடிகின்றது.

உண்மையில் இந்தக் கட்டுரைத் தொடரை இப்படி நீண்டதாக எழுதும் எண்ணம் எனக்கு இருக்கவில்லை. ஒரே ஒரு கட்டுரை, அதுவும் ஐயாவின் நூற்றாண்டு பிறந்த தினத்தில் அவர் நினைவாக எழுதவேண்டும் என்று கருதித்தான் ஆரம்பித்தேன். எழுத, எழுத விடயங்கள் வந்துகொண்டே இருந்தன. புதுப் புது தகவல்கள், ஊற்றில் பிரவாகம் எடுத்த வண்ணமாக இருந்தன. இன்னும் இருக்கின்றன. சுவடிகள் திணைக்களத்தில் போய் இரண்டு, மூன்று நாள்கள் அமர்ந்து ஐயாவின் பழைய பத்திரிகைகளை ஒரு தட்டு தட்டினேன் என்றால் இன்னும் நூறு நாள்கள் எழுத அற்புதமான விடயங்கள் கிட்டும். இரண்டு நாள்களுக்கு முன்னர் இத்தொடரில் புலவர்மணி பற்றியும் பண்டிதமணி குறித்தும் ஐயா குறிப்பிட்ட விடயங்களை வரைந்திருந்தேன். அப்போது தான் 'புலவர்மணியும் பண்டித மணியும்' என்று சாரப்



இறுதி ஊர்வலத்திற்கு முன் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்த எஸ்.டி.எஸ். ஐயாவின் பூதவுடல்.

பட்ட தலைப்பில் ஐயா பல இலக்கிய சுவையுள்ள விடயங்களை, சர்ச்சைகளை எழுதியமையை வாசித்த நினைவு வந்தது.

ஒரு பத்திரிகையாளராக பாரதி இழைத்த தவறுகளைக் கூட துணிவுடன் அப்பட்டமாக மெய்ப்பட எழுதியிருந்தார் ஐயா. இவற்றையெல்லாம் தொட்டால் இன்னும் பல நூறு அத்தியாயங்கள் எழுத முடியும். அதனால்தான் அவரை 'ஜாம்பவான்' என்கின்றோம்.

வெவ்வேறு தலைப்புகளில் ஐயாவின் எழுத்துப் பணி ஆராயப்பட வேண்டும். இலங்கைத் தமிழ் ஊடகத்துறையின் மேம்பாட்டில் அவர் பதித்தவை அத்திபாரம். அந்த அத்திபாரம் மண்ணுக்குள் மறைந்தாலும், நாம் அதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஊடகத்துறையில் அவர் ஆற்றிய அளப்பரும் பணியில் ஒரு கைப்பிடி அளவே இந்தத் தொடரில் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது என்பேன். இது வெறும் பேச்சுக்கான குறிப்பு அல்ல. ஆழமான உண்மை.

அவரது எழுத்தில் வடிக்கப்பட்ட பல்லாயிரம் கவிதைகளை தினபதி, சிந்தாமணி அலங்கரித்து நிறைத்துள்ளன. அதுவும் சிந்தாமணியின் முகப்புப் படமும், அதற்கு ஐயா யாத்திருக்கும் கவிதையும் என்றும் உயிர்ப்புள்ளவை.

**(12ஆம் பக்கம் பார்க்க)**

(சாயி பக்தராகவே வாழ்ந்து மறைந்தார் சிவநாயகம் ஐயா. அவரின் கடைசி எழுத்துக் கூட பாபா பற்றியதே. 'ஸ்ரீ சாயி கொடிப் பாட்டு' அவர் கடைசியில் தமது மேசையில் அமர்ந்து எழுதிச் சென்றது. வாசகர் பார்வைக்கு இங்கே பிரசுரமாகின்றது.)

**ஸ்ரீ சாயி கொடிப் பாட்டு**

சாயீ ! சாயீ ! சாயீ!
சத்ய சாயி பாபா நீயே
நித்தியம் எங்கள் தேவா

சாயி தர்மக் கொடி பாரீர் - அது
சர்வ மதங்களின் சங்கமம் காணீர்
எம்மதமும் எமக்குச் சம்மதம் என்றே
எட்டுத் திசையிலும் முழங்குது கேளீர்
சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
அத்துடன் அஹிம்சையும் ஒத்திடச் சேர்ந்து
ஐந்து சுடர் மிளிர் தாரகை யாக
ஆகாய வீதியில் சோதியாய்த் தோன்றும்
- சாயி தர்மக் கொடி பாரீர்

இந்துக்கள் பௌத்தர்கள் இஸ்லாமியர் கிறிஸ்தவர்
எந்த மதத்தவர் ஆயினும் ஒன்றே
நன்றே நினைப்பவர் நன்றாய் நடப்பவர்
நானிலம் எங்கணும் சாயியின் பக்தர்
- சாயி தர்மக் கொடி பாரீர்

பூஜை புரிகின்ற கைகளின் மேலாம்
சேவை புரிகின்ற கரங்களே என்று
அவதார புருர் அவனிக்கு உரைத்தார்
அவர் கூறும் போதனை அனைவர்க்கும் புதிது
- சாயி தர்மக் கொடி பாரீர்





எஸ்.டி.எஸ். ஐயாவின் கடைசிப் படங்கள் இவை இரண்டும். திருச்சியில் தமது மூத்த மகன் கட்டிய புதிய வீட்டை முதல் நாள் மாலை தமது மனைவியுடன் நேரில் சென்று பார்வையிடுகின்றார். அடுத்த நாள் மதியம் திருச்சியிலேயே அவர் நம்மைப் பிரிந்தார். வாழ்வின் களைப்பு அவர் முகத்தில் தெரிகிறது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 155

**403. பிரபாகரனுடனான சந்திப்பு நடந்ததா?**

பிரபாகரனுடனான சந்திப்பு நடந்தது. திருநெல்வேலிச் சம்பவம் மட்டும் என்றில்லாமல், நடந்து கொண்டிருந்தவை எல்லாம் பற்றியும் பேசினோம்.

திருநெல்வேலித் தாக்குதல் ஏன் செய்யப்பட்டது என்பது பற்றி நேரடியான பதில் தரப்படவில்லை. ஆனால் பல்கலைக்கழக மாணவிகளின் கற்பழிப்புகளுக்காக அது நடத்தப்படவில்லை என உணர்ந்து கொண்டேன். பிரபாகரனோ, பெண்களுக்கு எதிரான எவ்வளவோ கற்பழிப்பு சம்பவங்கள் இதற்கு முன்னர் நடைபெற்றுள்ளன என்றார். புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இராணுவ ட்ரக்கில் இருந்து இறந்தவர்கள் சிலரும் அவற்றில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு உள்ளது என்றும் சொன்னார். அவற்றுக்காக அது செய்யப்பட்டது என ஸ்ரீலங்கா அரசு எடுக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். நான் தமிழர் தகவல் நிலையம், இந்தச் சம்பவம் பல்கலைக்கழக மாணவர்களின் கற்பழிப்போடு நேரடியாகச் சம்பத்தப்பட்டதா என்பதை ஆதாரப்படுத்தி மனித உரிமை சங்கங்களுக்கு சமர்பிப்பதற்கு கேட்கிறார்களேயொழிய பழைய பொதுவான சம்பவங்களைப் பற்றியல்ல என்பதை விளங்கப் படுத்தினேன்.

சீலனின் மரணத்திற்காகத்தான், இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதென்பதையும் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை. சீலனின் மரணம் தனக்கு மாத்திரமல்ல, தோழர்கள் எல்லோருக்குமே பலத்த ஒரு இழப்பை தந்திருந்தது. ஆனாலும், தாங்கள் சோர்ந்து விடவில்லை, சோர்ந்து விடக்கூடாது,பாடங்கள் படிப்பிக்க வேண்டும் என்று செய்தோம் என விளக்கங்கள் தந்தார். அதன் விளைவுகளைப் பற்றிப் பேசினோம்.



அமிர்தலிங்கம்

ஒரு வித அறிவிப்புக் கொடுத்திருந்தால் கடைசி அந்தச் சுற்றாடலில் இருந்த மக்களாவது பாதுகாப்பாக வெளியேறியிருப்பார்கள். இந்தத் தாக்குதலால் அந்தச் சுற்றாடலிலேயே 50 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயப்பட்டனர். அதன் விளைவாக நாட்டின் பல பகுதிகளில் நடந்த கலவரம், அதன் அழிவுகள், தாக்கங்கள், இவற்றைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி எங்கள் மக்களிடம் இருந்ததா? இவை சிந்திக்கப்பட்டனவா? பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு பணிகளுக்கு எவ்வளவு நிதி தேவைப்படுகின்றன? இவற்றைச் சிந்திக்காமல் இப்படியான ஒரு தாக்குதலை மட்டுமே சிந்திப்பதுதான் முக்கியமா? இது சீலனின் இழப்பை பழிவாங்க செய்ததாகப் பலர் நினைக்கிறார்கள் என்று சொன்னேன்.



அன்டன் பாலசிங்கம்

சுற்றாடலில் இருந்தோருக்கு முன் எச்சரிக்கை தந்திருக்க வேண்டும் என்பதை பிரபாகரன் ஏற்றுக்கொள்ளவில்லை. சீலன், சங்கர் எல்லாம் கொல்லப்பட்டது, நிர்மலா, நித்தியானந்தன் போன்றோர் பிடிபட்டது எல்லாமே எங்களுக்குள் இருந்த உளவாளிகள், துரோகிகளால்தான். ஆகவே அப்படியொரு சம்பவம் நடக்கப் போகிறது என்று தெரிந்தாலே, அது படைகளுக்கு சென்றுவிடும். எங்களிடையே துரோகத்தனங்கள் இருக்கும் வரை அதற்கு வழியில்லை எனப்பட்டது.

ஆனால் விடுதலையை ஏற்றுக்கொண்ட மக்கள் வன்முறைக்கும் துன்பங்களுக்கும் பழகிக்கொள்ள வேண்டும். துன்பங்கள் இல்லாமல் விடிவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள் என்றார்.

அது சரி, ஆனால் நீங்கள் தற்சமயம் கெரில்லா தாக்குதல்களை செய்யக்கூடிய அளவில்தான் இருக்கிறீர்கள். அப்படியான நிலையில் இப்படியான பாரிய கலவரத்தையே ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள், அதன் விளைவாக இராணுவத்தினாலும், சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல் கலாசாரத்தில் செய்யப்படக் கூடியவை, அதை எங்கள் மக்களால் எதிர்த்து நிற்க முடியுமா என்பதை யோசித்தீர்களா எனக் கேட்கப்பட்டது. தமிழ் மக்கள் அப்பொழுது முகாம்களில் இருந்து சீரழிந்த நிலையும் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரபாகரனோ, நீங்கள் மிதவாதமாக பார்க்கிறீர்கள் அதாவது அரசியல்வாதிகள் மாதிரிப் பார்க்கிறீர்கள் என்ற அர்த்தத்தில் என்னைப் பார்த்து “இப்பொழுது மக்களின் உணர்ச்சிகளைப் பாருங்கள், மக்கள் முன்னிலும் பார்க்க தமிழீழம் என்றே நிற்கின்றார்கள். இளைஞர்களை இப்பொழுது நாங்கள் தேடிப்போக வேண்டியதில்லை. அளவுக்கு மீறி எங்களோடு சேர்ந்து போராட வருகிறார்கள். அவற்றுக்கெல்லாம் இது திருப்பு முனையாகி விட்டது. அவற்றை முன்னெடுக்க நீங்களும் உதவி செய்ய வேண்டும்” - என்றார். அதையொட்டி நானும் சில விடயங்களைத் தொட்டேன்.

**404. என்ன உதவிகள், எந்த விடயங்கள் பேசப்பட்டன?**

தாங்கள் ஒரு கெரில்லா படையாக இருக்கும் வரை, தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் அரச படைகளுக்கெதிராக அவர்களின் அட்டூழியத்திலிருந்து தமிழர்களையும் அவர்களது உடைமைகளையும் பிரதேசங்களையும் பாதுகாக்க முடியாது. 83 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகளால் ஜே .ஆரும், சிங்கள மக்களும், தமிழீழம் தான் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு என்று சொல்லியிருக்கிறார்கள். இளைஞர்கள் போராட அதிக அளவில் வருகிறார்கள். ஆகவே நாங்கள் தமிழ் மக்களுக்கான ஒரு தேசிய இராணுவத்தை கட்டமைக்க வேண்டும். (Tamil National Liberation Army) அது தான் எனது திட்டம். அதற்காக இளைஞர்கள் வருகிறார்கள். பணமும் ஆயுதங்களும் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க தேவை. அது தமிழ்ப் பகுதிகளுக்குள் செய்வது கடினம். இந்தியாவில் தான் முடியும். நீங்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் பண உதவி பெற்றுத் தாருங்கள். ஆயுதங்கள் வாங்கிக் கொள்ளலாம் என்றார். தங்களிடம் ஒரே ஒரு T - 56 துவக்குதான் உண்டு இன்னும் இராணுவம் பாவிப்பது போன்று பல ஏ.கே.- 47 களே இல்லை. ஓலைக்கால், சீலைக்கால் நிலைதான், ஆனால் நாங்கள் எங்கள் துணிவில் - அர்ப்பணிப்பில் - இருக்கும் ஆயுதங்களை வைத்து செய்வதை பார்த்து பெரிய அளவில் ஆயுதங்களை வைத்திருப்பதாக நம்புகிறார்கள்.

வாடிய முகத்துடன் என்னை ஏறிப்பார்த்து எங்களது விடுதலைப் புலி அங்கத்தினர்கள் எல்லோரிடமுமே தமது பாதுகாப்பிற்காக அவர்களுக்கென்ற துப்பாக்கிகள் இல்லை. அனேகமானோர் கத்தியோடு தான் திரிகிறார்கள்.

பல AK47, Rocket Launchers Missiles என்பவை ஊடுருவி தாக்க, இராணுவத்தை கட்டுப்பாட்டுக்குள் வைக்க தேவையாகின்றன. அவைக்கெல்லாம் கோடிக் கணக்கில் பணம் செலவழிக்கப்பட வேண்டும். உங்களைப் போன்றவர்கள் நிறுவனங்களிடமிருந்தும் புலம்



பிரபாகரன்

பெயர் மக்களிடமிருந்தும் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டது.

உதவி செய்வதற்கு முயற்சிகள் எடுப்பதற்கு ஒத்துக் கொண்டேன். ஆனால் அவ்வளவு பெரும் தொகைகள் புனர்வாழ்வு நிதிகளினூடாக பெற்றுக்கொள்ள கூடியதில் உள்ள கஷ்டங்களையும் யதார்த்தங்களையும் விளக்கினேன். ஆனால் விடுதலைப் போராட்டம், அரசியல் நிலை, அண்மையில் நடந்த சம்பவங்கள் வளரும் பாதைகளை ஒட்டி நாங்களோ, புத்திஜீவிகளோ, புலம்பெயர் மக்களோ, ஆரோக்கியத்தன்மையை வெளிப்படுத்தவில்லை. அவையும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும் என்று சொன்னேன். நடந்த சலசலப்புக்கள் நடந்ததாகவே இருக்கட்டும். ஒற்றுமை வேண்டும், நாங்கள் ஜே.ஆர். பறிக்கும் குழிக்குள் விழக்கூடாது என்பதையும் அறிவுறுத்தினேன்.

**405. பிரபாகரன் ஒத்துக்கொண்டாரா?**

பிரபாகரனது இயல்பை நான் நன்கு அறிவேன். அவர் கேட்டுக்கொண்டிருந்தார். என்னையோ, தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தவர்களையோ அவர் எதிர்த்து பேசியமை கிடையாது. மரியாதை வைத்திருந்தவர். எதிர்த் தர்க்கம் செய்வதும் குறைவு. அவர் ஒரு திட்டத்தை கையிலெடுத்தால் அதனை தனக்குள்ளேயே வைத்து செயற்படுத்துவதற்கு முன்னேறுவாரேயொழிய, மற்றைய அபிப்பிராயங்களை கணக்கெடுப்பதில்லை. தலைமைக்கான பிணக்குத் தொடரத்தான் போகிறது என்ற எண்ணம் எனது மனதில் உறுதியாகிற்று.

(09ஆம் பக்கம் பார்க்க)

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** தன்னுடைய தனிவாழ்வுப் பிரச்சினைக்காக மதுரை மாநகரை எரித்த கண்ணகியை, தீவிரவாதிகள் லிஸ்ரில் அல்லவா சேர்க்கவேண்டும். அவளைப் போய்க் கடவுளாய்க் கும்பிடுகிறார்களே. இது நியாயமா? பட்டிமண்டப நடுவர் அவர்களே! நீங்களே ஒரு தீர்ப்பைச் சொல்லுங்கள்.

**பதில் :-** என்ன கிண்டலா? முடிந்தால் ஒரு பட்டிமண்டபத்திற்குத் தீர்ப்பைச் சொல்லித்தான் பாருங்களேன்! அப்போ தெரியும் நான் படுகிறபாடு. சரி இனி உங்கள் கேள்விக்கு விடை காண்போம். உங்கள் கேள்வியிலேயே பிழை இருக்கிறது. படிக்காமல் கேள்வி கேட்கக்கூடாது என்பது இதற்குத்தான். “அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்” என்று வள்ளுவப் பெருந்தகை உங்களைப் போன்றோரை நினைத்துத்தான் எழுதியிருக்கிறார் போல. கண்ணகி மதுரையை எரித்ததாய் உங்களுக்கு யார் சொன்னது? அவள் மதுரையைத் தூய்மையல்லவா செய்தாள். அக்கினியை அழைத்த கண்ணகி என்ன கட்டளையிட்டாள் என்று உங்களுக்குத் தெரியுமா? “பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க!” என்பதுவே கண்ணகி அக்கினிக்கு இட்ட கட்டளை என்கிறார் இளங்கோவடிகள். தீயவர்களை அழித்துவிடு! என்ற அவளது உத்தரவால் மதுரை தூய்மையானது தான் உண்மை. ஒரு நகரத்தைத் தூய்மை செய்த அவளைக் கடவுளாய்க் கும்பிடுவதில் என்ன தவறு இருக்கிறதாம்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ சூப்பர் தீர்ப்புங்கோ. நெடுக அரசியல் எழுதுவதை விட்டிட்டு வாரிதியார் இப்பிடியும் கொஞ்சம் எழுதலாமே!**

**2. கேள்வி:-** சைவராகிய நீர் எதற்கெடுத்தாலும் “சுமந்திரன், சுமந்திரன் என்று பஜனை பாடுகிறீரே! அந்தக் கிறிஸ்தவர், சைவத்திற்கு எதிரானவர் என்பது உமக்குத் தெரியாதா?

**பதில் :-** ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு திருக்கேதீஸ்வரத்தில் ஆலயத்தின் சார்பாக சிவராத்திரிக்கென்று அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவை, ஒரு பாதிரியார் தலைமையிலான கூட்டத்தினர் வந்து உடைத்து அட்டூழியம் பண்ணினார்கள். அதை எதிர்த்துப் போடப்பட்டுள்ள வழக்கில் திருக்கேதீஸ்வர நிர்வாக சபைக்குச் சார்பாக வழக்குத் தொடுத்து, நீதிமன்றத்தில் வக்கீல் ஒருவர் வாதிட்டுக் கொண்டிருக்கிறாராம். நுண்மையான அவரது வாதத்திறமையை நீதிமன்றமே பாராட்டுகிறதாம். நீங்கள் சொன்ன சைவத்திற்கு எதிரான சுமந்திரன் என்னும் கிறிஸ்தவர்தான் அந்த வழக்கை நடத்தும் வக்கீல் என்கிறார்கள். தெரியாமல் உங்களை ஒன்று கேட்கிறேன், ஈழ விடுதலை கேட்கும் நீங்கள் அந்த ஈழத்திற்குள் சைவ ஈழம், கிறிஸ்தவ ஈழம், இஸ்லாமிய ஈழம் என்று இன்னும் எத்தனை பிரிவுகள் தான் செய்யப் போகிறீர்கள்?



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ யாராங்கே! அந்தக் கிறிஸ்தவ வக்கீலுக்கு வாரிதியாரின் சார்பாக ஒரு பொன்னாடையைப் போர்த்தி விடுங்கள்! ஹி..ஹி..**

**3. கேள்வி:-** கூட்டமைப்புக்குள் பகை வளர்ந்து கொண்டிருப்பது வெளிப்படை. அதைத் திரும்பத் திரும்பப் பேசி என்ன பயன்? இன்றைய நிலையில் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கு ஏதேனும் வழி இருந்தால் அதைச் சொல்லுங்கள் சாமி?

**பதில் :-** வழி இல்லை என்று யார் சொன்னது? இருக்கும் வழியை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கு உள்ளவர்களுக்கு மனம் இல்லை என்பது தான் உண்மை.

நான்கு தூண்கள் தான் ஒரு வீட்டைத் தாங்கி நிற்கும். அதுபோல, ஓர் அரசியல் கட்சியையும் அறிவு, அனுபவம், ஆதரவு, ஆற்றல் எனும் நான்கு தூண்கள் தான் தாங்கி நிற்கவேண்டும். இந்த நான்கு தூண்களும் ஒன்று சேர்ந்தால்த்தான் ஒரு கட்சி பலம் பெறும். ஒரு வீட்டைத் தாங்கும் நான்கு தூண்களில் ஒன்று அசைந்தாலும் அந்த வீடு பலமிழந்து



விடுவது போல, ஒரு கட்சியிலும் மேற்சொன்ன நான்கு விடயங்களில் ஒன்று தளர்ச்சியுற்றாலும் அக்கட்சி ஆட்டங் காணத் தொடங்கிவிடும்.

நம் ஈழத்தமிழர்க்கான அரசியல் கட்சிகளில், மேற்சொன்ன நான்கு தகுதியும் ஒருசேர அமைந்திருப்பதுதான் கூட்டமைப்பினுடைய இன்றைய தனிப் பலம். மற்றைக் கட்சிகள் போல மேற்சொன்னவற்றில் ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லாமலிருக்கும் குறைபாடு கூட்டமைப்பில் இல்லை. நாடாளுமன்ற இருக்கைகள் பலவற்றை இழந்துவிட்ட இன்றைய நிலையிலும் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேச வரும் அனைத்து நாட்டவரும், அதனால் தான் முதலில் கூட்டமைப்புடனேயே பேசுகிறார்கள்.

இந்த உண்மையை மற்றவர்கள் விளங்குகிறார்களோ இல்லையோ, கூட்டமைப்பினரே விளங்காதிருப்பது தான் கொடுமை. கூட்டமைப்புக்குள் இந்த நான்கு ஆற்றலும் ஒருமித்துப் பொருந்தியவராய்த் தனி ஒருவரை இனங்காட்டமுடியாது போனாலும் தனித் தனி இவ் ஆற்றல்களைக் கொண்டவர்கள் அங்கு இருக்கத்தான் செய்கிறார்கள்.

கட்சியின் அறிவுப் பகுதியை சுமந்திரன் சிறப்பாக நிறைவு செய்கிறார். அனுபவத்திற்கு சம்பந்தன், மாவை போன்றோர் இருக்கிறார்கள். மக்கள் ஆதரவை சிறிதரன், சுமந்திரன், சித்தார்த்தன், அடைக்கலநாதன், சாணக்கியன் போன்றோர் பூர்த்தி செய்கின்றனர். ஆற்றலுக்கு இன்றைய இளைஞர்களின் ‘ஹீரோவான சாணக்கியனும் கூட்டமைப்பின் “இராஜதந்திரியான சுமந்திரனும் முக்கியமானவராகின்றனர். இந்த நான்கு ஆற்றல்களையும் தனித்தனியே கொண்டு நிற்கும் தலைவர்கள் தம்முள் கைகோர்த்தால், கூட்டமைப்பை யாராலும் அசைக்க முடியாது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் கட்சியில் இருக்கும் மேற்சொன்ன ஒவ்வொருவரும் தாம் பெற்றிருக்கும் பலத்தைத் தகுதியாய்க் கொண்டு, தத்தம் ஆற்றலை மட்டும் முதன்மைப்படுத்தி இயங்கப் பார்க்கிறார்கள். இதுதான் பிரச்சினை. நாலு காலில் ஓடுகிற மாட்டை எவராலும் ஒரு காலில் ஆற்றலுடன் ஓடவைக்க முடியாது. இவ் உண்மையை இக் கட்சியில் இருக்கும் மேற் சொன்ன தகுதியாளர்கள் உணரவேண்டும்.

இன்றைய நிலையில் முதல் வேலை, உடைந்து கொண்டிருக்கிற வீட்டை (கட்சியை) நிலை நிறுத்தவேண்டும் என்பதேயாம். அதற்குப் பிறகுதான் வீட்டிற்கு யார் தலைவர் என்பதை முடிவு செய்யும் தேவை வரும். முட்டாள்தனமாக வீடு இடிந்தாலும் பரவாயில்லை நான்தான் தலைவராய் வரவேண்டும் எனும் ஆசையால் ஒவ்வொருவரும் அவ் வீட்டின், தத்தமக்கு வாய்ப்பான தூண்களை உலகறிய அசைக்க முனைகிறார்கள். அதுதான் பிரச்சினை. ஊரில் சொல்லுமாற்போல “ஆடு அறுப்பதற்கு முன்பு எதையோ அறுக்க நினைக்கின்ற கதைதான்” இது. இந்த யதார்த்த உண்மையைக்கூடப் புரிந்து கொள்ளாத இவர்கள் தான் தமிழினத்தைக் காக்கப் போகிறார்களாம்! சிரிப்புத்தான் வருகிறது.

கட்சியைப் பலப்படுத்த தேவையான எல்லாம் கட்சிக்குள்ளேயே இருக்கின்றன. அவற்றை ஒன்றிணைக்க வேண்டியதுதான் இன்றைய தேவை. கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சி என்பவைகளின் தலைவர்களான சம்பந்தன், மாவை இருவரும் முதுமையின் எல்லையில் இருக்கிறார்கள். அது?மட்டுமன்றி நடுநிலையின்றியும் அவர்கள் இயங்கத் தலைப்படுகிறார்கள். அதனால் இவ் ஆற்றல்களை ஒன்றிணைக்கும் அக்காரியத்தை அவர்களால் செய்யமுடியாதென்பது திண்ணம். எனவே, அவ்விருவரையும் அனுபவ ஆலோசகர்களாய் மட்டும் ஏற்று, ஏனைய ஆற்றலாளர்கள் தம்முள் ஒன்றிணைந்து கட்சியைப் பலப்படுத்த முன்வரவேண்டும்.

இன்றைய நிலையில், சுமந்திரன், சிறிதரன், சித்தார்த்தன், அடைக்கலநாதன், சாணக்கியன் போன்றோர் ஒருதரம் பகை மறந்து, அரசியல் சாராத சமூகப் பொது மனிதர்கள் சிலரின் முன்னிலையில் அமர்ந்து, மனந்திறந்து பேசவேண்டும். அந்தப் பேச்சு புத்தியால் நிகழ்த்தப் படாமல் இதயத்தால் நிகழ்த்தப்படவேண்டும். அதைச் செய்தால், அடுத்த நாளே “வீடு உறுதியாகிவிடும். வீட்டை உடைத்து எல்லோரும் நடுவீதிக்கு வராமல் வீட்டைப் பலப்படுத்தி அதற்குள் வாழும் வாழ்க்கைதான் அவர்களுக்கும் நல்லது, தமிழினத்திற்கும் நல்லது. இதைச் செய்தாலே போதும் கூட்டமைப்பு பலம் பெற்றுவிடும் என்பது என் கருத்து.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ ‘வெல்டன்’ வாரிதியார்! நியாயமான அட்வைஸ். பேசாமல் நீங்களே அவர்களைக் கூப்பிட்டுப் பேசினால் என்ன? “ஊருக்கு உழைத்திடல் யோகம்” என்ற பாரதியாரின் கவிதையை நினைவு கொள்ளுங்கள்.**

**4. கேள்வி:-** என்ன? உமது சுமந்திரனை விட சாணக்கியன் மக்கள் செல்வாக்கில் உயர்ந்து கொண்டு போவதால் தான் மெல்ல அவரைக் குட்டிக் குறைக்கப் பார்க்கிறீரா?


சாணக்கியன்

**பதில் :-** இந்தக் கோணல் புத்திதான் எங்கள் மக்களின் சொந்தப் புத்தி போல் ஆகிவருகிறது. சாணக்கியனின் ஆற்றலை இனங்கண்டு அரசியலுக்கு அழைத்து வந்தவர் சுமந்திரன்தான். இந்த உண்மை தெரியாமல் பேசினால் நீங்கள் நரகத்திற்குத்தான் போவீர்கள்! தனது மும்மொழி ஆற்றலாலும், ஆளுமையாலும் இன்றைய இளைஞர்களின் மனம் கவர்ந்த “ஹீரோவாகிக்” கொண்டிருக்கிறார் சாணக்கியன். அந்தப் புகழால் அவரது சமநிலை கெட்டுவிடக்கூடாது என்பது தான் என்னுடைய விருப்பம்.

பொய்யான ஆதரவும் பிழை. பொய்யான எதிர்ப்பும் பிழை. அமிர்தலிங்கத்தை ஒருகாலத்தில் இதுபோலத்தான் பெரிய “ஹீரோவாய்ப் பாராட்டியது நம் இனம். பின்னர் அவரைச் சுட்டுப் போட்டிருந்தபோது அதையும் அதே இனம் வேடிக்கை பார்த்தது.

சாவகச்சேரி பொலிஸ் ஸ்ரேஷன் அடித்த பொழுது, ரெலோ தலைவர்களை நம் இனத்தார் “ஹீரோ’ ஆக்கினார்கள். பின்னர் அவ் அமைப்பின் தலைவர் சிறீசபாரத்தினம் துரத்தித் துரத்திச் சுடப்பட்ட போது, அதனையும் வேடிக்கை பார்த்தார்கள்.

பிற்காலத்தில் பிரபாகரனைக் கடவுள் போல் ஆக்கிய நம்மவர்கள், பின்னர் அவரைச் சுட்டுப் போட்டிருந்த போது அதனையும் சாதாரணமாக ஜீரணித்தார்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)

இந்தவாரம் இவர்

ஆக்கம் - திமாகா

# என்றும் வாழும் புரட்சி வீரன்

# சேகுவேரா

ஆர்ஜென்டீனாவை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோசலிசப் புரட்சியாளர் சேகுவேராவின் நினைவுநாள் இன்று – அவர் நினைவாக பிரசுரமாகும் கட்டுரை இது



தென் அமெரிக்கா முழுக்கத் தொழுநோய் பீடித்திருந்தகாலம். அது குறித்து ஆய்வு செய்யவும், அதற்குத் தங்களால் எதுவும் மருந்து கண்டுபிடிக்க முடியுமா என்ற தேடலுமே அந்தப் பயணத்துக்கான ஆரம்பம்.

பெரு நாட்டில் அமேசான் ஆற்றங்கரையில் இருந்த தொழுநோயாளர் குடியேற்றம் ஒன்றில் சில வாரங்கள் தொண்டு செய்வது அவரது இப்பயணத்தின் இறுதி நோக்கமாக இருந்தது. தொழுநோயாளிகளின் தங்குமிடங்களைத் தேடித் தேடிச்சென்று, அவர்களின் தோளில் கை போட்டு உண்டு, உறங்கி, கால் பந்தாடிய 'சே'வின் உள்ளத்தில் பலவிதமான போராட்டங்கள் தொழு நோயாளர்களிடம் அவர் காட்டிய பரிவு மற்ற மனிதர்களிடம் இருந்து அவரை பிரித்துக் காட்டியது. இப்பயணத்தின் போது அவர் எடுத்த குறிப்புக்களைப் பயன்படுத்தி 'மோட்டார் ஈருருளிக் குறிப்புக்கள்' என்னும் தலைப்பில் உடன் பயணித்த கிரனாடோவால் எழுதப் பட்ட புத்தகம் உலகப் பிரபல்யம் பெற்றது. இந்த புத்த கத்தை அடிப்படையாக வைத்து பின்னர் 2004 இல், இதே பெயரில் எடுக்கப்பட்ட திரைப்படம் விருதுகளையும் பெற்றது சேவின் வாழ்வை முழுவதுமாக புரட்டிப் போட்ட பயணம் அது. இதுவரையும் அவரின் மேல் புரட்சியின் எந்த சிறுநிழலும் விழுந்திருக்கவில்லை. புத்தக வாசிப்பு, நண்பர்கள், விளையாட்டு என அவரது உலகம் உல்லாசமாக இருந்தது. ஆனால் இந்தப் பயணம் அவருக்கு பல படிப்பினைகளை தந்தது. தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும் மக்களின் ஏழ்மை, பிணி, அறியாமை, அடக்குமுறை, வாக்குரிமை பறிப்பு, வர்க்க வேறுபாடுகளுக்குக் காரணமாக அமெரிக்காவும் அவர்களது சி.ஐ.ஏ. உளவுநிறுவனமும் செயல்படுவதை அறிந்தார். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அனைத்துக்கும் வொஷிங்டனும் அதன் முதலாளித்துவமும் மட்டுமே காரண



மாகக் கண்டறிந்தார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வாக மார்க்சியம் அவர் சிந்தனையில் தோன்றியது. மார்க்சியம் என்பது கார்ல் மார்க்கஸ் போன்ற மெய்யியலாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை ஆகும். மார்க்சியம் என்பது கார்ல் மார்க்ஸ், மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகிய மெய்யியலாளர்களின் ஆய்வுகள், எழுத்துக்கள் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் உலகப் பார்வை ஆகும். மார்க்சியம், பொருளியல், அரசியல், மெய்யியல் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அடிப்படையில் மார்க்சியமானது, இயங்கியல் பொருள் முதல்வாத கருத்தியலின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட மெய்யியலாகும்.

பொதுவுடமை அல்லது கம்யூனிஸம் வர்க்கமற்ற சமுதாயத்தை அமைப்பதற்கு தேவையான கோட்பாடுகள் கொண்ட தத்துவம் ஆகும். ஏகாதிபத்திய, முதலாளித்துவ தத்துவங்களின் குறைபாடுகளுக்கான ஒரு தீர்வாகும்.

இந்தகொள்கை தொடர்பான அறிவு சேவிற்கு வரக் காரணம் நூல்கள் மட்டுமன்றி இவரது குடும்பம் இடதுசாரி சார்பான குடும்பமாக இருந்ததால் மிக இளம் வயதிலேயே மார்க்சியம் தொடர்பான பரந்த நோக்கு இவருக்குக் கிடைத்தது.

1953 ஜூலையில் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்றதும் அங்கிருக்கப் பிடிக்காமல், மீண்டும் பயணமொன்றைத் தொடங்கிய சேகுவேரா, இம்முறை பொலீவியா, பெரு, ஈக்குவடோர், பனாமா, கொஸ்தாரிக்கா, நிக்கராகுவா, ஹொண்டூராஸ், எல் சல்வடோர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

அதே ஆண்டு டிசெம்பரில் சேகுவேரா குவாதமாலாவுக்குச் சென்றார். அங்கே மக்களாட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிய குடியரசுத் தலைவர் ஜாக்கோபோ ஆர்பென்ஸ் குஸ்மான் என்பவர் நிலச் சீர்திருத்தங்களின் மூலமும் பிற நடவடிக்கைகளாலும் பெருந்தோட்டமுறையை ஒழிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார்.

உண்மையான புரட்சியாளனாக ஆவதற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் குவேரா, குவாத்தமாலாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார். ஏற்கெனவே அவருக்குள் உருவாகியிருந்த அமெரிக்கா மீதான கோபத்தை குவாத்தமாலாவின் அரசியல் சூழல் அதிகப்படுத்தியது.

'சே', அங்கிருந்த கம்யூனிஸ்ட்களுடன் தன்னை இணைத்துக்கொண்டு, அமெரிக்காவுக்கு எதிரான வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார். ஆனால், அமெரிக்கா தனது எண்ணத்தைச் சுலபமாக நிறைவேற்றி ஜேக்கப் அர்பான்சோ அரசைக் கவிழ்த்தது.

1953ஆம் ஆண்டு இதே நாள் கியூபாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த பாடிஸ்டா தலைமையிலான அரசைத் தூக்கி எறிவதற்காக புரட்சிக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்காக பிடல் அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ உள்ளிட்ட 120 வீரர்கள் சாண்டியாகோ கியூபாவில் அமைந்திருந்த மொன்காடா இராணுவத்தளத்தை தாக்குவதற்கு திட்டம் தீட்டினர்.

பிடலினுடைய திட்டம் என்னவென்றால் அபெல் சண்டமரிய தலைமையிலான 20 வீரர்கள் அடங்கிய



முதலாவது குழு இராணுவத்தளத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் வைத்தியசாலையைக் கைப்பற்றுவது, லெஸ்டர் தலைமையிலான 5 வீரர்கள் அடங்கிய இரண்டாவது குழு கட்டடத்தைக் கைப்பற்றுவது, பிடல் தலைமையிலான 90 பேர் அடங்கிய மூன்றாவது குழு தளத்தைத் தாக்கி தொலைத்தொடர்பு நிலையத்தைக் கைப்பற்றுவது என்பதாகும்.

பிடல் இழைத்த ஒரு சிறிய தவறினால் அவரின் வாகனம் சிறிய விபத்துக்குள்ளாகின்றது அவரைக் காப்பாற்ற கெரில்லா வீரர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள பிடல் தனது வாகனத்தை இராணுவத் தளத்தின் வாசலை நோக்கி செலுத்திக் கொண்டிருந்தார். ஆனால் வாகனத்தின் பின்னால் இருந்த வீரர்கள் தாக்குதல் ஆரம்பித்து விட்டதால் தாம் இராணுவத்தளத்தின் உள்ளே இருக்கின்றோம் என நினைத்து வெளியே குதிக்கின்றனர் இதனால் அபாயமணி ஒழிக்க பாடிஸ்டாவின் இராணுவம் சுதாகரித்துக் கொள்கின்றது.

தாக்குதல் முடிவில் 15 கெரில்லா வீரர்களும் 3 இராணுவத்தினரும் கொல்லப்பட 23 கெரில்லா வீரர்களும் 5 இராணுவத்தினரும் காயமடைகின்றனர். எஞ்சிய வீரர்கள் பிடல் மற்றும் அவரது தம்பி ரால் காஸ்ட்ரோ உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டு தீவுச்சிறையில் அடைக்கப்பட்டனர் அவர்களில் 56 கெரில்லாக்கள் கொலையும் செய்யப்படுகின்றனர். பதினைந்து ஆண்டு கால சிறைவாழ்க்கை என தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் மக்கள் புரட்சியின் விளைவாக பிடல் பொது மன்னிப்பின் பெயரில் விடுதலை ஆகின்றார்.

1959, பெப்ரவரி 16இல் கியூபாவின் பிரதமராக காஸ்ட்ரோ பதவியேற்றவுடன் குவேராவை ஒரு கியூபன் என்று அறிவித்தபிறகு அந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தேசிய வங்கியின் அதிபராகவும் பிடல் காஸ்ட்ரோவால் நியமிக்கப்பட்டார். விவசாயத் துறையில் தேசியத் தலைவராக நியமிக்கப்பட்டார் 'சே'

தேசிய வங்கியின் தலைவராக கியூபா ரூபா நோட்டுகளில் 'சே' என கையெழுத்திடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றார். பின் 1961ஆம் ஆண்டு தேசிய வங்கியின் பதவியைத் துறந்து தொழிற்துறை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். இருந்தாலும் 'சே' தன்னை ஒரு சாதாரணக் குடிமகனாகவே அடையாளம் காட்டிக் கொண்டார்.

விவசாயக் கூலிகளுடன் சேர்ந்து கரும்பு வெட்டுவதும், தொழிற்சாலைகளில் இதர பணியாளர்களுடன் சேர்ந்து மூட்டை சுமப்பதுமாகவே வாழ்ந்தார். 'சே' மற்றும் காஸ்ட்ரோ இருவருக்குமிடையே யுத்தத்துக்கு முன்பும் பின்புமான உறவுகளில் வேறுபாடுகள் இருந்தன என்றாலும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்ததில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதியாக, ஒற்றை மனிதனாகத் தன்னால் வேரறுக்க முடியும் என 'சே' திடமாக நம்பினார். கியூபாவுக்கு ஏவுகணைகள் இறக்குமதி செய்ய ரஷ்யா வாக்குறுதி தந்தபோது, "ரஷ்ய ஏவுகணைகள் கியூபாவில் இறங்கினால் அது முதலில் அமெரிக்க நகரங்களையே குறிவைக்கும்" எனத் தைரியமாகக் குரல் கொடுத்தார். அமெரிக்கா, கியூபாவின் மீது விதித்த பொருளாதாரத் தடைதான் அவரது இந்தக் கட்டற்ற கோபத்துக்குக் காரணம்.

(09ஆம் பக்கம் பார்க்க)

## என்றும் வாழும் .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் சி.பி.எஸ். தொலைக்காட்சி, ஒரு நேர் காணலுக்காக சேகுவேராவை நியூயோர்க்குக்கு அழைத் தது. “அமெரிக்கா ஒரு கழுதைப் புலி. அதன் ஏகாதிபத்தி யத்தை நான் வேரறுப்பேன்” என அமெரிக்க மண்ணி லேயே துணிச்சலாகப் பேட்டி தந்தார் ‘சே’. சென்ற இடங்களி லெல்லாம் அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்கிப் பேசி னார்.

இந்நிலையில் கொங்கோவின் அரசியல் சூழல், அவரை மிகவும் பாதித்தது. மக்கள் புரட்சிக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. மூன்று மாத கியூபா அரசால் அங்கீகரிக்கப்படாத பயணத்துக்குப் பிறகு, ‘சே’ 1965 மார்ச்சில் கியூபா திரும்பினார். விமான நிலையத்தில் அவரை ஃபிடல் காஸ்ட்ரோ கை குலுக்கி வரவேற்றார். அதுதான் வெளியுலகுக்கு ‘சே’ நேரடியாக வெளிப்பட்ட கடைசி நிகழ்வு. அதன் பிறகு ‘சே’வைக் காணவில்லை. எங்கே போனார் என யாருக்கும் தெரியவில்லை. அன்றிரவு ஒரு சந்திப்பில், காஸ்ட் ரோவின் தம்பி ரால் காஸ்ட்ரோ ‘சே’வை சுடு சொல் லால் அழைத்தார் எனவும், அது ‘சே’வின் மனதை மிகவும் காயப்படுத்தியதாகவும், அதுதான் ‘சே’ கியூபாவை விட்டு வெளியே செல்லக் காரணம் என்றும் சொல்லப்படுவ துண்டு.

1964ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் குவேரா அமெரிக்கா, ஆபிரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கு மூன்று மாத அதிகா ரப்பூர்வமான சுற்றுப்பயணம் மேற்கொண்டு திரும்பியபோது, தனது அதிகாரப்பிடி தளர்ந்து போனதை குவேரா அறிந்து கொண்டார். அதனால் கியூபாவை விட்டு விலகி மற்ற நாடுக ளில் புரட்சி ஓங்குவதற்கு உதவி புரியும் பொருட்டு அங்கிருந்து கிளம்பினார்.

உண்மையில் ‘சே’ பிடல் காஸ்ட்ரோவின் முன்னிலை யில் தனது எல்லாப் பதவிகளையும் கியூபா நாட்டு குடியுரிமை யையும் துறந்தார். அந்த வருட ஜூலை மாதம் கெய்ரோ வழியாக கொங்கோவிற்கு ரகசியமாகப் பயணித்தார். அவரது பதவி மற்றும் கியூபாவின் குடியுரிமை துறப்பு பற்றிச் செய் தியை பிடல் காஸ்ட்ரோ ஒக்ரோபர் மாதம் கியூபன் மக்களுக்கு அறிவித்தார்.

காஸ்ட்ரோவை விட்டு பிரிவதற்கு முன் ‘சே’ எழுதிய கடி தத்தை ஒரு பொதுக் கூட்டத்தில் காஸ்ட்ரோ படித்தார். 1967 ஒக்ரோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம். காலை 10.30 யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் ‘சே’ கடந்து செல்கிறார். வழியில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண்ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக்களைப் பரிசாகத் தருகிறார்.

நண்பகல் 1.30 அந்தக் குண்டுப் பெண் பொலிவிய இராணு வத்துக்கு ‘சே’வின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும் துப்பாக்கியால் சுடுகின்றனர். பிற்பகல் 3.30 காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கியுடன் சூழ்ந்த பொலிவிய இராணுவத்திடம், “நான் தான் ‘சே’. நான் இறப்பதைக் காட்டிலும், உயிருடன் பிடிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்” என்கிறார்.

மாலை 5.30 அருகிலிருந்த லா ஹிகுவேராவுக்கு வீரர் கள் கைத்தாங்கலாக ‘சே’வை அழைத்து வருகின்றனர். அங் கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் ‘சே’ கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறைவைக்கப்படுகிறார்.

இரவு 7மணிக்கு ‘சே பிடிபட்டார்’ என சி.ஐ.ஏவுக்குத் தகவல் பறக்கிறது. அதே சமயம், ‘சே’ உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டார் என பொய்யான தகவல் பொலிவிய இராணு வத்தால் பரப்பப்படுகிறது.

தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், “இது என்ன இடம்?” என்று ‘சே’ கேட்கிறார். பள்ளிக்கூடம் என அந்தப் பெண் கூற, “பள்ளிக்கூடமா ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?” என வருத்தப்படுகிறார். சாவின் விளிம்பிலும் ‘சே’வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறார். ஒக்ரோபர் 9 அதிகாலை 6 மணி லா ஹிகுவேரா வின் பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு ஹெலிக்கொப்டர் வட்டமடித்த படி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்திவாய்ந்த ரேடியோ மற்றும் கமராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட்ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார். கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால்கள் கட்டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் ‘சே’வைப் பார்த்ததும், அவருக்கு அதிர்ச்சி. அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந்தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது கனவா என நினைத்தார். பிடிபட்டிருப்பது ‘சே’தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. ‘சே’வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன. தான் கொண்டு வந்த கமராவில் ‘சே’வை பல கோணங்களில் புகைப்படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் ‘சே’வின் அப் புகைப்படங்கள் இன்றள வும் வரலாற்றின் மிச்சங்கள்.

‘சே’ நம் காலத்தின் ஒப்பற்ற தலைவர். கியூபா மக்கள் அந்த மகத்தான தலைவனை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டும்” என வேண்டுகோள் விடுக்கிறார்.

எது எப்படி ஆயினும் சே குவேராவை இன்றும் போற்றும் மக்கள் அவனைப்பற்றி இழிவாக வெளிவரும் செய்திகளை முற்றிலுமாகப் புறக்கணிக்கிறார்கள் என்பதே உண்மை. சே குவேராவின் சிந்தனையும் இலட்சியங்களும் இன்றைக் கும் சிறந்தவையாக கருதபடுகின்றன.

# வைத்தியசாலைகளில் பணியாற்றும் சிற்றூழியர் அடையாள பணிநிறுத்தம்

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் பணி யாற்றும் சிற்றூழியர்கள், நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணியிலிருந்து 12 மணிவரை அடை யாள போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அந்தவகையில் பருத்தித்துறை ஆதார வைத்தி யசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தி யசாலை சிற்றூழியர்களும் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

அதாவது, இடைநிறுத்தப்பட்ட விசேட கொடுப்ப னவான ஏழாயிரத்து ஐந்நூறு ரூபா கொடுப்பனவை தொடர்ந்து வழங்கக்கோரியும் சீருடை கொடுப்பனவை அதிகரித்து வழங்கக் கோரியும் காணப்படுகின்ற ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி யும் கொரோனாத் தொற்று ஏற்பட்ட ஊழியர்களின் விடுப்பை அதிகரிக்க கோரியும் மேலதிக நேர கொடுப் பனவை அதிகரிக்கக் கோரியுமே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மேற்படி போராட்டத்தில் வைத்தியசாலைகளின் சிற்றூழியர்கள் கலந்து கொண்டு தமது கோஷங் களை முன்வைத்தனர்.

# தடுப்பூசி முழுமையாகப் பெற்றவர்களுக்கு டிஜிற்றல் அட்டை தயாரிப்பு பணிகள் நிறைவு



முழுமையாக தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக் கான டிஜிற்றல் அட்டையை தயாரிப்பதற்கான நடவ டிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

துறைசார் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த அட்டைகளை விநியோகித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப் பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைவாக, முழுமையாக தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்ட, வெளிநாடுகளுக்கு செல்லும் எதிர்பார்ப்பிலுள்ளவர்களுக்காக குறித்த டிஜிற்றல் அட்டைகளை விநியோகிக்கும் செயற்பாடுகள் தற் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் கூறி னார்.

போலியான அட்டையை தயாரிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காத வகையில் முழுமையான பாதுகாப்புடன் குறித்த அட்டை தயாரிக்கப்பட்டுள் ளது. கியு.ஆர். குறியீடு ஊடாக தகவல்கள் வழங்கப் பட்டுள்ளன என துறைசார் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

## இனப் படுகொலையும் ........

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் எனக்கு மனதில் பட்டதை பிரபாகரனுக்கு பிடிக்குமோ இல்லையோ, என்றாலும் சொல்லும் கடமை உண்டு என்ற அணுகுமுறையில் விளங்கப்படுத்தினேன். அவை முக்கியமாக பாலசிங்கத்தினதும், அமிர்தலிங்கத்தினதும் அரசியல் ஆளுமைகள் பற்றியவைதான்.

பாலசிங்கம் இடது சாரி அரசியல் படித்தவர், அதையொட்டி சர்வதேச நிலைகள் அறிந்தவர். ஆனால் அவருக்கு அரசியல் பின்னணி என்று ஒன்றிருக்கவில்லை. லண்டனுக்கு போகும் முன்னர் தமிழர் அரசியலோடு ஸ்ரீலங்காவில் பெருமளவு ஈடுபடவில்லை. நான் அறிந்தளவில் அவர் லண்டனில் வசித்த போது விடுதலைப் புலிகளுடன் இணையும் வரையில் அங்குள்ள புலம்பெயர் மக்களுடன், பெருவாரியாக பழகியவரோ, ஈடுபட்டவரோ அல்லர். ஒரு பெரும் தலைவராக புலம் பெயரில் உயரக்கூடிய இயல்பும் அவருக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவர் தனி மனிதனாக அவரது அறிவைப் பகிர்ந்து கொள்ளவே விரும்பினார். அவரது இருப்பும் பெயரும், பிரபாகரனிலும் விடுதலைப் புலிகளிலும் தங்கியிருக்கிறது. அது இல்லாவிட்டால், பாலசிங்கம் என்ற பெயர் ஒரு இடதுசாரி புத்திஜீவி என்பதற்கு மேல் பேசப்படவாய்ப்பில்லை. ஆனால் அமிர்தலிங்கம் அப்படியல்லர். இளமையிலிருந்தே தமிழ் மக்களின் அரசியல் மூச்சிலே வளர்ந்தவர், வாழ்ந்தவர். தலைவராக ஸ்ரீலங்காவிலும் சர்வதேசத்தில் அறியப்பட்டவர். ஆகவே தலைமைப் பதவி என்று அவரை ஒதுக்காமல் பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படியில்லாவிட்டால் விடுதலை மட்டில் அது பெரும் தவறாக முடியும். அப்படியானால் பாலசிங்கத்தை பற்றி நீ யோசிக்கலாம். ஆனால் அவரை ஒதுக்கி விட்டு மேற்செல்ல வேண்டும் என்ற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. எங்களது போராட்டத்திற்கு எல்லோருடைய உதவிகளுமே தேவை. புலம் பெயர் தமிழ் மக்களிடையே பெருவாரியான மக்களிடம் அமிர்தலிங்கத்திற்கு ஒரு மரியாதை உண்டு என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் - என்றேன்.

அப்பொழுது இடைமறித்த பிரபாகரன், ‘விடுதலைக்கு ஒருவர்தான் தலைவராக இருக்க வேண்டும், எங்களுக்கு அமிர்தலிங்கம் இப்பொழுது விடுதலை வேண்டுபவராகத் தெரியவில்லை, அந்த வாணம் ஏறும் வரை ஏறி இப்பொழுது அணைந்து விட்டது, அவர் புத்தி தரட்டும், ஆனால் தானேதான் விடுதலைக் கப்பலின் தலைவன், ஆகவே தான்தான் கப்பலை நடத்துவேன் என்று அமிர்தலிங்கம் நிற்க முடியாது, அது விடுதலைப்புலிகளாகத்தான் இருக்க வேண்டும்.” - என்றார்.

பாலசிங்கம் மாதிரியல்ல, அமிர்தலிங்கத்திற்கு அவருக்கென்ற ஆளுமை ஒன்று உண்டு. அதனை விடுதலைப் போராளிகள் அனுசரித்து போக வேண்டும். பாலசிங்கம் உங்களோடு இணைந்து போவார். ஏனெனில் அது அவருக்குத் தேவை. ஆனால் அமிர்தலிங்கம் சேர்ந்து நடப்பார், ஆனாலும் அவருக்கு என்ற கர்வம் இருக்கும். ஏனெனில் தமிழர் பிரச்சினைகள் பற்றியும் அதன் நெளிவு சுளிவுகளை பற்றியும் அவருக்கு இருக்கும் அறிவு யாருக்கும் இல்லை. இருந்து பாருங்கள், இந்தியா இப்போது உள்ள நிலைகளால், தமிழருக்கு ஏதும் செய்ய நினைத்தால் ஜனநாயக மரபுப்படி அமிர்த லிங்கம் மூலம்தான் ஏதும் செய்ய முயற்சி செய் வார்கள் என்ற சாரப்பட நான் கூறினேன். பிரபாகரன் “அதனை நான் அறிவேன். அதேபோல் இந்தியா எங்களுக்கு தமிழ் ஈழம் எடுத்து தரும் என்றும் நாம் நம்பவில்லை. அமிர்தலிங்கம் அவர்களிடம் அதை இப்பொழுது கேட்கவும் மாட்டார்” என்றார். இருவரும் ஒருவரை ஒருவர் விடுதலைப் பாதைகள் எப்படிப் போகும் என்பதை புரிந்து கொண்டோம்.

## பாட்டும் நானே? .............

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தி வந்ததும் தீக்கு ளிக்க வேண்டாம், டீ குடிக்காமலாவது யாராவது இருந்தார்களா? இந்தப் பொய்மைதான் வேண்டாம் என்கிறேன்.

ஒருவர் புகழடைந்து உயர்ந்து வரும்போது அவ ருடைய தவறுகளைத் திருத்துவதுதான் நேர்மை. அதைத்தான் நான் செய்கிறேன். வெல்கிற போதும் கைதட்டி, வீழ்கிற போதும் கைதட்டி ரசிக்கும் கீழ் மையை ஒருக்காலும் நான் செய்யமாட்டேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இடிக்குந் துணை யாரை யாள்வாரை யாரே கெடுக்குந் தகைமைய வர். எப்படி? நாங்களும் வாரிதியாற்ற திருக்குறள் மாணவர்கள் தானாக்கும்.**

**5. கேள்வி:-** சீனாவுக்கு ஒரு பகுதி. அமெரிக்கா வுக்கு ஒரு பகுதி. இந்தியாவிற்கு மற்றொரு பகுதி என இன்றைய அரசு இலங்கையைக் கூறு போட்டு விற்பதாய்க்கூறி, சிங்களப் பேரினவாதிகள் கொதிப் பதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** பார்த்தேன். நன்றாகப் பார்த்தேன். தம் தாயக உரிமை வேற்றாரின் கைகளுக்குப் போகிற பொழுது ஏற்படும் வேதனையை இப்போதாவது அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும். தமிழர்களுக்கு அவர்களின் உரிமையைக் கொடுக்க மறுத்தவர்கள். அதற்கு விலையாகத் தமது உரிமையை இன்று யார் யார்க்கோ எங்கெங்கோ விற்கும் நிலை மைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதைத்தான் காலத் தின் கோலம் என்பது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ எளியாரை வலியார் வாட்டினால் பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள்?**

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் ஆர்ப்பாட்டம்



இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) காலை, மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த 5 ஆம் திகதி, இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவை படகு, குருநகர் பகுதி மீனவர்களின் படகை நேராக மோதி சேதப்படுத்தியதோடு, படகில் இருந்த குருநகர் மீனவர்களைத் தாக்க இந்திய மீனவர்கள் முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர் சங்கங்களின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற்றது.

"எமது கடல் வளங்களை அழிக்காதே, இலங்கை அரசே இந்திய இழுவைப் படகுகளை தடுத்து நிறுத்து, எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி வெளிநாட்டு மீனவர்களை அனுமதிக்காதே, இலங்கை அரசே உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்து, கடல் வளத்தை சுரண்டி எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே" போன்ற பல்வேறு கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்துக்கு பின்னர் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் இந்தவிடயம்தொடர்பாகமனுவொன்றும்கையளிக்கப்பட்டது.

இதேவேளை, கடற்றொழில் அமைச்சருக்கும் யாழ். மாவட்ட செயலகத்திற்கும் யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்துக்கும்மனுகையளிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது

## செல்வமகள் திருவடியை சிக்கெனவே பிடித்திடுவோம்!



(சரஸ்வதி பூஜையில் இன்று இலக்குமிக்கான தினம் ஆரம்பம். அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.)

நிலையாக நில்லாமல் நீள்சுகத்தை நல்காத
அலைபாயும் பொருள்நாடி அனைவருமே அலைகின்றார்
அலைமகளே உன்னருளை அவர்நாடா ஓடுகிறார்
அவரகத்தை மாற்றிவிட அருள்சுரப்பாய் அலைமகளே

இவ்வுலக வாழ்வினுக்கு இன்பமே பொருளாகும்
இன்பமதை மனமிருத்தி பொருள்நாடல் முறையல்ல
பொருளெம்மை வந்தடைந்தால் போகமதை மனமகற்றி
அலைமகளின் அருள்கிடைக்க அனுதினமும் வேண்டிடுவோம்

தளர்வறியாச் செல்வமதை தந்தருள வேண்டுகிறோம்
நிலைதழும்பா வாழ்க்கையினை நீயருள வேண்டுமம்மா
விலையில்லாச் செல்வமென்று விளம்பிநிற்கும் மனமகல
அலைமகளே அருள்புரிவாய் அடிபணிந்து பரவுகிறோம்

அளவான பொருளமைய அலைமகளே அருளிடம்மா
அறம்செய்யும் அகமமைய அருள்புரிவாய் அலைமகளே
ஆசைவலை அறுவதற்கு அம்மாநீ உதவிடுவாய்
அனுதினமும் திருவடியைப் பரவுகிறோம் அனைவருமே

கொள்ளையிடும் குணமுடையார் குவலயம் விட்டகலவேண்டும்
குணமுடையார் குவலயத்தில் குறைவிலா திருக்கவேண்டும்
வறுமையெனும் வார்த்தையது வரண்டழிந்து போகவேண்டும்
வையகத்தில் மக்களென்றும் வாழ்வாங்கு வாழவேண்டும்

செல்வமதை தீதில்லா வழியினிலே பெறவேண்டும்
செல்வமதை நல்லதற்கு செலவிடவே எண்ணவேண்டும்
செல்வமது செல்லுமெனும் நிலையதனை மனமிருத்தி
செல்வமகள் திருவடியை சிக்கெனவே பிடித்திடுவோம்

வற்றாத செல்வமதை வழங்கினாலும் தாயே
வழங்குகின்ற மனமமைய வரமருள்வாய் நீயே
சுற்றமொடு சூழவுள்ளார் சுமையகல வேண்டும்
சுந்தரியே இலக்குமியே தொழுகின்றோம் அம்மா

நற்கருமம் செய்வதற்கே நற்செல்வம் தருவாய்
தற்பெருமை கொண்டோரை தலைபணிய வைப்பாய்
பொற்குவியல் கொடுத்தாலும் நற்குணத்தை அளிப்பாய்
புனிதமுடை நின்பாதம் தொழுகின்றோம் அம்மா

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

## 3 மாதங்களுக்கு பின்னர் நடைபெற்றது திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம்

### மட்டக்களப்பு மாவட்டத்தில்





கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த 3 மாதங்களாக இடம்பெறாதிருந்த மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலக ரீதியாக முன்வைக்கப்பட்டிருந்த 245 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், பிரதேச செயலக ரீதியில் காணப்படுகின்ற அரச திணைக்களங்களுக்கான காணி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, பிரதேசமட்டகாணிபயன்பாட்டு குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில், மாவட்ட பயன்பாட்டுக் குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சிபாரிசு வழங்கப்பட்டுள்ளன. மேலும் முதலீட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் குறுங்கால மற்றும் நீண்டகால குத்தகைக்கு காணிகளை வழங்குவது தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான மயானங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக காணிகளை பராதீனப்படுத்துதல் தொடர்பாகவும் இதன்போது பரிசீலனை செய்யப்பட்டு, சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 18 - 19 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு பாடசாலைகளிலேயே தடுப்பூசி ஏற்றல்

18 - 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையை, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்வி கற்கும் அந்தந்தப் பாடசாலைகளிலேயே தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கொரோனா ஒழிப்புக்கான விசேட செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்துப் பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம், வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ள மேற்படி வயதுப் பிரிவினருக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும்.

இதுவரையில், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் 100 சதவீதமளவிலும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல், 98 சதவீதமளவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என, இக்கூட்டத்தின் போது எடுத்துரைக்கப்பட்டது.

20 - 30 வயதுக்கு இடைப்பட்டோரில், இதுவரை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

12 - 19 வயதுக்கு இடைப்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் காணப்படும் சிகிச்சையகங்களின் (கிளினிக்) ஊடாக, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தற்போது நாட்டில் அமுலிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வரையில் நீடிக்கவும், கொரோனா ஒழிப்புச் செயலணி தீர்மானித்தது. தடுப்பூசி ஏற்றலை வெற்றிகரமானதாக்க ஒத்துழைப்பு வழங்கிய சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2021 இல் வெளியிடப்பெற்றது.

# நல்லிணக்கத்திற்காக உழைத்த விஜயகுமாரணதுங்க!

## சினிமாவிலிருந்து அரசியலுக்கு வந்த ஆளுமை!!



**இன்று ஒக்ரோபர் 09 பிறந்த தினம்**

**- முருகபூபதி -**

இந்திரா பார்த்தசாரதி எழுதிய சுதந்திரபூமி நாவலை படித்திருக்கிறீர்களா?

இந்திய அரசியலை அங்கதச் சுவையோடு எழுதப்பட்ட இந்த நாவலில் வரும் முகுந்தன் என்ற பாத்திரம் முழுமையான சித்திரிப்பு. மத்திய அரசில் செல்வாக்கு மிக்க அரசியல் தலைவரின் வீட்டுக்கு காப்பி தயாரிக்கும் வேலைக்காரனாக வரும் முகுந்தன், படிப்படியாக அங்குவரும் அரசியல் தலைவர்களின் நன்மதிப்பையும் பெற்று பின்னாளில் அவரது வாரிசாக அரசியலுக்குள் பிரவேசித்து தலைவனாகின்றான். அமைச்சராகின்றான். அந்த முகுந்தன், பிரதமர் தொடக்கம் பல தலைவர்களுக்கும் 'தண்ணி' காட்டும் கதை. அவர்களின் கண்களில் விரலைவிட்டு ஆட்டும் கதைதான் சுதந்திரபூமி.

திரைப்படங்களில் தோன்றிவிட்டு, அவற்றின் வசூல் வெற்றியை கொண்டாடும் ரசிகர்களின் மோகத்தை மூலதனமாக்கி, நாளைய முதல்வர்களாக வர முயற்சிக்கும் கனவில் மூழ்கியிருக்கின்றவர்களின் கதைகளை சமகாலத்தில் படித்து வருகின்றோம்.

இந்தப்பின்னணிகளுடன் பல வருடங்களுக்கு முன்னர் இந்திரா பார்த்தசாரதி எழுதிய சுதந்திர பூமி நாவல் இன்றும் பேசப்படுவதற்குக் காரணம் அதில் வரும் பாத்திரங்கள் இன்றும் வேறு வேறு ரூபங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பிறக்கும் எவரும் எதிர்காலத்தில் எந்தநிலைக்குச்செல்வார்கள் என்பதை முன்கூட்டியே சொல்லமுடியாது. அரசியலும் அப்படித்தான். இ.பாயின் சுதந்திரபூமியில் வரும் முகுந்தன், ஒரு அரசியல் தலைவரின் வீட்டில் காப்பி தயாரிக்கும் சாதாரண வேலைக்காரன். அவன் வாழ்வில் நேர்ந்த விபத்து அவனை அரசியல் தலைவனாக்கியது.

நடிகனாக வாழ்க்கையை தொடங்கிய எம்.ஜி.ஆர். எதிர்காலத்தில் தான் தமிழக முதல்வராவேன் என்று தான் நடித்த முதல் நாடகத்தின்போதோ அல்லது முதல் திரைப்படமான சதிலீலாவதியில் தோன்றும்போதோ நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்.

அதுபோன்றுதான் ஜெயலலிதாவும், என். ரி. ராமராவும் பின்னாளில் அரசியலில் பிரகாசிக்க முனையும் சினிமாக்கலைஞர்கள் பலரதும் ஆரம்ப கால வாழ்க்கை அரசியலுடன் எள்ளவும் சம்பந்தப்பட்டிருக்காது.

அதனைத்தான் இ.பா. அவர்களும் சுதந்திரபூமி நாவலில் காப்பி தயாரிக்கவந்த முகுந்தன் மூலம் சொல்லியிருப்பார். இலங்கையிலும் ஒருவருக்கு அரசியல் பிரவேசம் விபத்தாகி, இறுதியில் அதுவே விபரீதமாகியிருக்கிறது!

அவருக்கு இன்றைய தினம் ஒக்ரோபர் 9 ஆம் திகதி பிறந்த தினம். அவர்தான் 1945 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி வடமேற்கிலங்கையில் சீதுவை என்ற ஊரில் பிறந்து, 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, கொழும்பின் புறநகரான பொல்ஹேன்கொடவில் தனது வீட்டு வாசலில் சில மறைகரங்களின் தூண்டுதலால் சுட்டுக்கொல்லப்பட்ட விஜயகுமாரணதுங்க.

இவரது இயற்பெயர் கொவிலகே அன்டன் விஜயகுமாரணதுங்க. இளம்வயதிலிருந்தே கலையார்வம் கொண்டிருந்தவர். பாடகரானார். இசை நிகழ்ச்சிகளில் பாடினார். வேலைதேடும் படலத்திலிருந்தபோது, சீதுவையில் அமைந்திருந்த ஒரு தியேட்டரின் வாயிலில் அனுமதிச் சீட்டு கிழித்து ரசிகர்களை அரங்கிற்குள்ளே அனுப்பும் தொழில்தான் முதலில் கிடைத்தது. பின்னாளில் அதே ரசிகர்கள் அவரை திரையில் பார்த்து கொண்டாடினர். ஆனால், அவருக்காக ரசிகர் மன்றம் அமைக்கவில்லை! இலங்கையில் எந்தவொரு சிங்கள சினிமா நடிகருக்கோ நடிகைக்கோ ரசிகர்மன்றம் இல்லை. எந்தவொரு சிங்கள நடிகைக்கும் கோயிலும் கட்டவில்லை!

அழகான தோற்றம் - இனிமையான குரல்வளம் கொண்டிருந்த இவரை சினிமா கவர்ந்தது. இவர் நடித்த முதல் படம் 'ஹந்தானே கத்தாவ.' 1969 ஆம் ஆண்டு திரைக்கு வருகிறது. அதுவரையில் காமினி பொன்சேக்கா, டோனி ரணசிங்க, எடி ஜயமான்ன, அசோக்கா பொன்னம்பெரும, ஜோ அபேவிக்கிரம முதலானோர் சிங்கள திரைப்பட உலகை கலக்கிக்கொண்டிருந்தனர். புதுமுகமான விஜயவின் பிரவேசத்தையடுத்து, சிங்கள திரைப்பட இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் இவரை நாடினர். தொடர்ந்து பல வெற்றிப்படங்களை தந்தார்.

மேற்சொன்ன நடிகர்களுடனும் மாலினி பொன்சேக்கா, கீதா குமாரசிங்க, சிறியானி அமரசேன, சுவர்ணா மல்லவராச்சி, வசந்தி சத்துராணி முதலான நடிகைகளுடனும் மற்றும் ரவீந்திர ரந்தெனிய, விக்கிரம போகொட, விமல் குமர டீ கொஸ்தா, பிரடீ சில்வா, சிறில் விக்கிரமகே, ஹென்றி ஜயசேன முதலான நடிகர்களுடனும் நடித்தார். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், தர்மசேன பத்திராஜ, திஸ்ஸ அபேசேகர, சுமித்ரா பீரிஸ் ஆகிய



புகழ்பெற்ற இயக்குநர்களின் படங்களில் தோன்றினார். அவற்றில் பல சர்வதேச விருதுகளும் பெற்றன. இலங்கை - பிரித்தானிய கூட்டுத்தயாரிப்பான புழுன முஷ்பெ படமும் இவருக்கு புகழைத்தேடித்தந்தது.

இவர் பாடியிருக்கும் பாடல்களும் நூறைத்தாண்டும். அவையும் இசைத்தட்டுகளில் பதிவாகியிருக்கின்றன. வரதட்ட தண்டுவம் (குற்றத்திற்கு தண்டனை) என்ற படத்தையும் தயாரித்தார். நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களப்படங்களில் நடித்திருக்கும் விஜயகுமாரணதுங்க, ஏராளமான ரசிகர்களை சம்பாதித்தார். இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், வசனகர்த்தாக்கள், மற்றும் திரைப் படத்துறையிலிருந்த அனைவருடனும் பின்னணி பாடகர்களுடனும் நல்லுறவைப்பேணியவர்.

அவர் முதலில் சாதாரண அங்கத்தவராக இணைந்திருந்ததுலங்கா சமசமாஜ கட்சியில்தான். அவரை திரையில் பார்த்திருந்தாலும், முதல் முதலில் நேரில் பார்த்துப்பேசியது 1981 ஆம் ஆண்டுதான். அந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி நள்ளிரவில் யாழ்ப்பாணம் பொது நூலகம் அன்றைய ஜே.ஆர். பதவிக்காலத்தில் தீக்கிரையாக்கப்பட்டதை கண்டித்து கண்டனக்கூட்டம் நடத்துவதற்கு எங்கள் ஊரிலிருந்த முற்போக்கு சக்திகளுடன் இணைந்து ஒரு ஆலோசனைக் கூட்டத்தை எங்கள் ஊர் சமசமாஜக்கட்சி யின் காரியாலயத்தில் நடத்தினோம்.



அதற்கு வருகை தந்திருந்த விஜயகுமாரணதுங்க, யாழ் நூலக எரிப்பை கண்டித்துப் பேசியதுடன் அதன் பின்னர் நாம் அந்தப்பிரதேசங்களில் நடத்திய கண்டன இயக்கங்களிலும் கலந்துகொண்டார். வண. பிதா திஸ்ஸ பாலசூரிய, மனித உரிமைச்செயற்பாட்டாளர் ஜி. செனவிரத்தின, லீனஸ் திஸாநாயக்கா ஆகியோரும் அந்த இயக்கத்தில் இணைந்தனர். கொழும்பு நகர மண்டபத்திலும் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கமும் வரவிருந்தார். எனினும் இறுதி நேரத்தில் கொழும்பு பொலிஸ் தரப்பு அரசின் அழுத்தத்தினால் அதற்கு அனுமதி தரவில்லை.

விஜயகுமாரணதுங்க, மூவின மக்களினதும் அபிமானத்தை பெற்றிருந்தவர். எவருடனும் எளிமையாக பழகியவர். பல் மருத்துவரான கடும்போக்காளர் குணதாஸ அமரசேகர எழுதிய கருமக்காரயோ (1980) என்ற திரைப்படம் ஒரு விவசாயக்கிராமத்தில் எடுக்கப்பட்ட வேளையில், அதில் கதாநாயகனாக நடித்த விஜய, படப்பிடிப்புவேளையில் வயலில் இறங்கி விவசாயிகளுடன் வேலை செய்தார். அவர்களின் உணவை விரும்பிச்சு வைத்தார். அவர் சேற்றில் இறங்கியதனால், படப்பிடிப்பும் தாமதமடைந்தது. இயக்குநர் திஸ்ஸ அபயசேகர, அவரைக் கண்டித்தபோதும் கோபிக்காமல் "அவர்கள் சேற்றில் கால் வைப்பதனால்தான் நாம் சோற்றில் கை வைக்கின்றோம்' என்று வாழ்க்கைத்தத்துவம் பேசி அனைவரையும் சிரிக்கவைத்தார். இவ்வாறு கூர்மையாகப்பேசி தான் இருக்கும் இடத்தை கலகலப்பாக்குவார்.

மாஸ்கோவில் 1985 இல் நடந்த உலக மாணவர் இளைஞர் விழாவிலும் கலந்துகொண்டவர். அச்சமயம் ஒரு இந்தியப்பத்திரிகையாளர், இவரை பேட்டிகண்ட போது, 'நீங்கள் முன்னாள் பிரதமர்களின் மருமகன் தானே..?' எனக்கேட்டதும், 'அவர்கள் எனது மனைவியின் பெற்றோர்கள்.' - என்றார்.

இந்தப்பயணத்தில் தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த அ.தி.மு.க. மற்றும் தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்களுடனும் அவர் இலங்கை இனப்பிரச்சினை குறித்து பேசினார். இந்திய மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சீத்தாரம யச்சூரியையும் இங்கு சந்தித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து 1970 இல் ஆட்சிக்கு வந்த சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் சகிக்க முடியாத செயற்பாடுகளினால் அடுத்தடுத்து வெளியேறின. 1977 இல் தேர்தல் வந்தசமயம் அந்த இரண்டு கட்சிகளும் இணைந்து இடதுசாரி ஐக்கிய முன்னணியை அமைத்துப் போட்டியிட்டன. விஜயகுமாரணதுங்க, எங்கள் ஊருக்குச் சமீபமாகவிருக்கும் கட்டானை தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட்டார். கடுமையான போட்டி. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விஜயபால மெண்டிஸை விட குறைந்த வாக்கு வித்தியாசத்தில் விஜயகுமாரணதுங்க தோல்வியுற்றார்.

விஜயகுமாரணதுங்கவின் திரைப்பட உலக நண்பரும் பிரபல பாடகருமான எச்.ஆர். ஜோதிபால, ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர். 1977 தேர்தல் காலத்தில் அவர் ஐ.தே. க. மேடைகளில் பாடினார். ஆனால், தனது நண்பர் விஜயகுமாரணதுங்க போட்டியிட்ட கட்டான தொகுதி பக்கம் மாத்திரம் வரமாட்டேன் என்று மறுத்துவிட்டார். மின்னேரியா, மஹர தொகுதிகளிலும் விஜேகுமாரணதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். மக்களிடம் அவருக்கு செல்வாக்கு பெருகியிருந்தாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரத்தில் 'ஒரு நடிகன் எப்படி அரசியலுக்கு வர முடியும்' என்ற எள்ளல்தான் மேலோங்கியிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜேவீராவும் மேடைகள் தோறும் அவரை 'நடிகன் நடிகன்' என்றுதான் அவமானப்படுத்தினார். எனினும் அவரது வளர்ச்சியை அன்று ஜே.ஆரும், பிரேமதாஸவும் விஜேவீராவும் குறைத்து மதிப்பிடவில்லை. 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்., ஸ்ரீமாவின் குடியியல் உரிமைகளைப் பறித்தார். அதனால் அவரால் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடவோ மேடைகளில் பேசவோ முடியாமலிருந்தது.

(தொடரும்.....)




## கட்சியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உரிமையாளர் நான் என்பதால் என்னை ஐக்கிய மக்கள் சக்தி இருந்து யாராலும் வெளியேற்றிவிட முடியாது என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து டயனா கமகே நீக்கப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே டயனா கமகே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கட்சி எனது கணவரின் கட்சியே. நானும், கணவரும் இந்தக் கட்சியைக் கொடுத்த காரணத்தினாலேயே எதிர்க்கட்சியில் பலர் இங்கே வந்துள்ளனர்.

மழைக்கு ஒதுங்க வீட்டில் இடம் கொடுத்தால் வீட்டின் திறப்பையே மற்றி, என்னையே வெளியேற்ற முயற்சிக்கின்றனர். அவ்வாறு என்னை வெளியேற்றி விட முடியாது.

எனது மனச்சாட்சிக்கு இணங்கவே அரசுக்கு ஆதரவளிக்கும் தீர்மானங்களை எடுத்தேன். இதன்படி தொடர்ந்தும் தீர்மானம் எடுப்பேன். சஜித் போன்று நான் பொம்மையாக இருக்க மாட்டேன் - என்றார்.

## மேலும் 38 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 267 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 38 சாவுகளில் 20 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 5 ஆண்கள், 7 பெண்கள் என 12 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர் களாவர். 26 பேர் 60 வயதுக்கு மேற்பட்ட வர்களாவர். இதில் 15 ஆண்களும், 11 பெண்களும் அடங்குகின்றனர்.

## மாவிலாற்றைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொன்சேகா அந்தப் பதிவில்,

விசேட படையணியின் தளபதி என்ற வகையில் உங்கள் தந்தை பிரசன்ன டி சில்வாவை, 2006 ஆம் ஆண்டில் மாவிலாற்றை மீட்பதற்காக வவுனியாவிலிருந்து கல்லாறுக்கு அழைத்தேன்.

அதனைத் தொடர்ந்து, விசேட படையணியுடன், பீரங்கி, விமானப்படையின் உதவியுடன் மாவிலாற்று அணைக்கட்டை படையினர் மீட்டெடுத்தனர்.

அன்று மனிதாபிமான காரணங்களைப் போர்க் காரணிகளாக மாற்றக் கூடாது என்ற முதலாவது பாடம் பிரபாகரனுக்குக் கற்பிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பிரசன்ன டி சில்வா, சம்பூர், வாகரை, கதிரவெளி, வெருகல் உட்பட கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை முதல் மட்டக்களப்பு வரையிலான அனைத்து நடவடிக்கைகளிலும் சிறப்புப் படைகளை வழி நடத்தியவர் என்றும் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, இறுதிப்போரில் 55 மற்றும் 59 ஆம் படையணி தளபதியாக முக்கிய பங்களிப்பை அவர் வழங்கினார் என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அதன்படி அன்று அவரின் வீரத்துடன் இராணுவத்தினர் வெற்றியடைந்ததைப் போன்று, இன்று சர்வதேச இசை மேடைகளில் யொஹானி தாய்நாட்டுக்குப் பெற்றுக்கொடுப்பது பெருமையும் வெற்றியுமே ஆகும் எனவும் சரத் பொன்சேகா தனது பேஸ்புக் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 18 -19 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்ததாவது:-

குறித்த வயதுகளையுடைய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலேயே தடுப்பூசி வழங்கப்படும். வைத்தியர்களின் கண்காணிப்பின் கீழ் தடுப்பூசி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

பாடசாலைக்குச் செல்லாத 18 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலுள்ள பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி வயது பிரிவினருக்குச் பைசர் தடுப்பூசியே வழங்கப்படவுள்ளது - என்றார்.

## மாகாணங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்டுப்படுத்தும் வகையில், கடந்த ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் ஒக்டோபர் முதலாம் திகதியுடன் தளர்த்தப்பட்டது.

எனினும், கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் தொடர்வதால், மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை ஒக்டோபர் 14 ஆம் திகதி வரை தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக்கூட்டத்தில் அதனை மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)
தனித்து ஆராயப்பட வேண்டிய - ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய - சிறப்பும் சுவையும் செம்மையும் மிக்கவை. அந்த விடயத்தை வைத்தே ஒரு தொடர் எழுத முடியும்.

மீண்டும் மீண்டும் என் பரிந்துரையாகச் சொல்வேன். தமிழ் ஊடக செல்நெறி பற்றிய கற்கைக்குள் புகும் பல்கலை மாணவர்கள் தனித்து ஆய்வுக்குட்படுத்தி, தங்கள் தகுதி, திறமை, புலமையை வளர்த்துக் கொள்ளக்கூடிய அற்புத பொக்கிஷங்கள் ஐயாவின் எழுத்துக்களில் - அவரின் ஊடகத்துறை வரலாற்றில் - பொதிந்து கிடக்கின்றன.

இந்தத் தொடரை நான் முடிப்பது குறித்து என் வாசகர்கள் சிலருக்கு பெரும் ஆதங்கம். தினசரி புதிது புதிதாக பழைய விடயங்களை நினைவூட்டி வாசிக்கும் வாய்ப்பு முடிவுக்கு வருகின்றது என்ற கவலை. நேற்றும் கூட ஆஸ்திரேலியாவிலிருந்து இரு நண்பர்கள் அழைப்பு எடுத்து கட்டுரையை தொடர வற்புறுத்தினார்கள். யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் நேரில் வந்து கட்டுரையைத் தொடருங்கள் என்று அன்புக் கட்டளை இட்டார்.

"சிவநாயகம் என்று ஒருவர் இருந்தார் என்பதை உங்கள் கட்டுரையை வாசித்துத்தான் - அதன் மூலம்தான் - அறிந்து கொண்டோம். அதுவும் தமிழரசு காலூன்றவித்திட்டவர்களில் அவர் முக்கியமானவர் என்பதை உங்கள் கட்டுரையை வாசித்து, பின்னர் மூத்தவர்கள் பலருடன் உரையாடிய போதுதான் ஊர்ஜிதப்படுத்தினோம். அப்படிப்பட்ட வரை நம் சமூகம் அறிந்திருக்க வேண்டும். உங்கள் தீர்மானம் - கட்டுரைத் தொடரை முடிவுக்கு கொண்டு வரும் முடிவு - சரியானதாக எனக்குப் படவில்லை. நீங்கள்தான் உங்கள் பத்திரிகையின் ஆசிரியர். அவர்தான் உங்கள் குரு என்கிறீர்கள். உண்மைதான். அவரைப் பற்றி எழுத இன்னும் பல்லாயிரம் விடயங்கள் இருக்கின்றன என்கிறீர்கள். அப்படியானால் தொடர்ந்து சுவையாக எழுதுவதுதானே, அதுதானே உங்கள் கடமையும் பொறுப்பும். ஏன் தயங்குகிறீர்கள்? ஏன் இடையில் நிறுத்துகிறீர்கள்?" - என்று உரிமைக் கோபத்துடன் கேட்டார்.

முன்னரும் ஓரிரு தடவை அவர் இத் தொடரைப் பற்றி தொலைபேசியில் பேசியிருக்கிறார்.

முன்னர் தொலைபேசி உரையாடலின்போது அவர் குறிப்பிட்ட இன்னொரு விடயமும் நினைவுக்கு வந்தது.

"இப்போது முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் பலரும் உங்களை விமர்சிக்கும்போது 'ஊடக ஜாம்பவான்' என்று கிண்டலாகவோ,நளினமாகவோ அல்லது உண்மை உரிமையுடனோ குறிப்பிடுவது வழமை. ஆனால் நீங்களோ அந்தப் பெருமைக்குரியவர் ஒருவர்தான், அவர் என் குரு எஸ்.டி.எஸ். ஐயா மட் டும்தான் என்று கோடி காட்டுகின்றீர்கள். ஆச்சரியமாக இருக்கின்றது. திரும்பவும் திரும்பவும் அவரே ஊடக ஜாம்பவான், அவர் மட்டுமே தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் என்று அடிக்கடி கூறுகின்றீர்களே!" - என்றான் அந்தத் தம்பி.

அந்தத் தம்பி சொன்னது உண்மைதான். தமிழ் கவிதை உலகில் மகாகவி ஒரு சிலர்தான். கம்பனும் பாரதியும் அப்படி மதிக்கப்படுவார்கள். ஆனால் கண்ணதாசனும் வைரமுத்துவும் அந்த இடத்தை எட்ட முடியாது. அவர்கள் தத்தமது காலத்தில் சிறப்புற்றவர்களாக, சிந்தனைக்கு விருந்தாக அற்புதங்களைப் படைத்தனர். அவ்வளவே.

சிவநாயகம் ஐயா பற்றிய என் நினைவுப் பகிர்வு அவருக்கும், அவரது ஊடக ஆளணியினருக்கும் அதில் ஒருவனாக பணியாற்றிய எனக்குமான ஊடாட்டத்தின் பதிவு மட்டுமே. அதுவும் உரிய திட்டமிடல் இன்றி ஆரம்பிக்கப்பட்ட முயற்சி இது. அவ்வப்போது என் மனதில் பட்டவற்றைத் தந்துள்ளேன்.

இந்தத் தொடர் கூட காலவரிசைப்படி ஓர் ஒழுங்குக் கிராமத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது அல்ல. வாசகர்களின் சுவைக்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்களை - சில அனுபவங்களை - சில பதிவுகளை - ஒழுங்கு முறையின்றி அள்ளித் தெளித்திருக்கிறேன்.

ஆனால், எஸ்.டி.சிவநாயகம் என்று ஒரு பிரம்மாண்ட மனிதனின் - விஸ்வரூப ஜாம்பவானின் - ஒரு பக்கத்தைத் தொட்டுக் காட்டியதன் மூலம் அவர் பற்றிய ஒரு சிந்தனையை தமிழ் ஊடக உலகில் மீளவும் தட்டி எழுப்பிக் கிளறி விட்டிருக்கிறேன் என்ற திருப்தி எனக்கு உள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகில் என் எழுத்துக்கும் ஒரு வாசகர்கள் அணி இருக்கின்றது, நான் எழுதுகின்றவற்றை ஏற்றாலும், விமர்சித்தாலும், திட்டினாலும் கூட, அவற்றையெல்லாம் தாண்டி, அந்த எழுத்துகளை வாசிக்க வேண்டும் என்று ஒரு வாசகர் கூட்டம் நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் இருக்கின்றது என்றால் அதற்கு பிரதான காரணமாக அமைபவர்கள் இருவர்.

ஒருவர் - என் தந்தை. வாழ்க்கை யில் சினமுற்று நான் அறிந்திராத ஒரு வழிகாட்டி. வாசிப்பையும் தேடலையும் தமது முன்மாதிரி மூலம் என்னுள் விதைத்துச் சென்றவர். எழுத்தும் வாசிப்பும் அவர் வழியாய் எனக்குக் கிடைத்த முதுசொம் என்பேன்.

அடுத்தவர் - என்னை ஊடகத்துறையில் வனைந்த எஸ். டி.எஸ்.ஐயா. அவர் இத்துறையில் எனக்குச் சொல்லித் தந்தவை ஏராளம் என்றால், ஓர் ஐந்து ஆண்டுகள் அவருக்குப் பக்கத்தில் இருந்து நான் பார்த்துப் படித்தவை பல்லாயிரம்.

இந்த இருவருமே தமக்குள் நெருங்கிய நண்பர்கள். ஒருவர் என் தந்தை. மற்றவர் என் ஞானத்தந்தை. இருவருக் கும் கரம் கூப்பி என் கட்டுரைத் தொடரை முடிக்கிறேன்.

இந்தக் கட்டுரை தொடரை நான் தவறாது தொடர என்னை ஊக்குவித்து நின்ற ஐயாவின் சொந்தப் பிள்ளைகள் மற்றும் என் அலுவலக சகாக்களுக்கும், ஐயாவின் நல்வழி தொடரும் பத்திரிகையாளர்களுக்கும் என் நன்றிகள். வணக்கம்.

(முற்றும்)

# மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த அரசு முடிவு!

## மார்ச்சுக்கு முன் நடக்கும் என பஸில் நேற்று அறிவிப்பு
## சுமந்திரனின் தனி நபர் சட்டமூலமே பயன்படுத்தப்படும்

**கொழும்பு,ஒக்ரோபர் 09**

**நிலுவையில் இருக்கும் மாகாணசபைத் தேர்தல்களை அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்தி முடிப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் கூட்டத்தில் அறிவித்தார்.**

**இதற்காக மாகாணசபைத் தேர்தல்கள் சட்டமூலம் புதிதாக நாடாளுமன்றில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டும். இவ்விடயத்தில் வீண் கால தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கும் தனிநபர் பிரேரணையைக் கையில் எடுத்து புதிய மாற்றங்களோடு அதை விரைந்து நிறைவேற்றுவதற்கு ஆராயப்படுவதாகவும் நேற்று நாடாளுமன்ற தெரிவுக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**

தேர்தல் முறைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்றது. இந்தத் தெரிவுக்குழுவுக்கு புதிதாக சேர்க்கப்பட்ட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், எதிர்க்கட்சி உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் நேற்றுக் கூட்டத்திற்கு முதல்தடவையாக சமுகம் தந்தனர். அச்சமயத்தில் மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்துவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக பஸில் ராஜபக்ஷ கூறினார். எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசு தீர்மானித்து இருப்பதாகவும், அதற்காக மாகாணசபைத் தேர்தல் சட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர் அங்கு சொன்னார். இந்த விடயத்தில் சில சமயங்களில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு தேவைப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அச்சமயம் அங்கு உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், அத்தகைய சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயம் அல்ல என்று விளக்கினார்.

இது தொடர்பில் தாம் ஒரு தனிநபர் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பித்து இருக்கிறேன் எனவும், கால விரயத்தை தடுப்பதற்காக அதையே தேவையான மாற்றங்களோடு சமர்ப்பித்து நிறைவேற்றலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தக் கருத்துக்களை கூட்டத்தில் பங்குபற்றிய சட்ட மா அதிபரின் பிரதிநிதியும் அங்கீகரித்தார். மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயம் அல்ல என்று குறிப்பிட்ட சுமந்திரன், அப்படி தேவைப்பட்டாலும் கூட, கூட்டமைப்பு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி,ஜே.வி.பி. எல்லாமே ஒரேயடியாக ஆதரவு தர முன்வந்து இருக்கின்றன என்பதால் மூன்றில் இரண்டு பங்கு அல்ல,அதையும் தாண்டி முழு நாடாளுமன்றத்தின் ஆதரவுடனும் இத்தகைய சட்டமூலத்தை விரைந்து நிறைவேற்ற முடியும் என்றும் கூறினார். ஏனைய உறுப்பினர்களும் அந்தக் கருத்தை அங்கீகரித்தனர்.

இதேவேளை இதுவரை இருந்த தேர்தல் சட்டத்தை அப்படியே மீண்டும் சட்டமாக்கினால் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் விடயம் அதில் வராது என்பதை சுட்டிக்காட்டினார் பஸில் ராஜபக்ஷ.

முதலில் பழைய சட்டத்தை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வந்து, பின்னர் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகளைப் புதிய சட்டம் மூலமாகச் சமர்ப்பித்து நிறைவேற்றலாம் என்றார் சுமந்திரன்.

அந்தக் கருத்தும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

புதிய சட்ட மூலங்களை ஒழுங்குபடுத்தும் ஏற்பாடுகளை சட்ட மா அதிபர் திணைக்களம் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் சேர்ந்து மும்முரமாக ஈடுபடும் எனத் தெரிய வருகிறது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் தீயில் கருகிச் சாவு!

## பல கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை





நுவரெலியா மாவட்டத்தில் இராகலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட - இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் வியாழனிரவு 10 மணியளவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்துள்ளனர்.

தாய், 11 வயது மகள், ஒரு வயது ஆண் குழந்தை மற்றும் குறித்த பிள்ளைகளின் தாத்தா, பாட்டி ஆகியோரே இவ்வாறு தீயில் உடல் கருகி மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆர்.ராமையா (வயது 55), அவரின் மனைவியான முத்துலெட்சுமி (வயது 50), இவர்களின் மகள் டிவனியா (வயது 32) மற்றும் குறித்த மகளின் பிள்ளைகள் இருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், உயிரிழந்த ஆர்.ராமையாவின் மகனான ரவீந்திரன் (வயது 30) உயிர் தப்பியுள்ளார். இதேவேளை, சம்பவம் இடம்பெற்றபோது ராமையாவின் மகளின் கணவர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

ராகலை, முதலாம் பிரிவு தோட்டத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற் பட்டுள்ளது.

இதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. பல கோணங்களில் தீவிர பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

# ஐஸ் போதைப்பொருள் விற்பனை; துன்னாலையில் பெண் சிக்கினார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி, துன்னாலையில் வீடொன்றில் ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்த பெண் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப் பொருளும், ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 30 வயது பெண்ணே நேற்றுமுன்தினம் மதியம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

# வவுனியாவில் 24 பேருக்குத் தொற்று

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 24 பேருக் குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளார் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர் புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டோர் மற்றும் தாமாக முன்வந்து பரிசோதனை செய்தவர்களின் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில வியாழனிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 24 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியா, செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்தவரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவ டிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

# பிரசாத்துக்கு பதவி உயர்வு



யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நாட்டில் 225 தலைமை பொலிஸ் பரிசோதகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக (ஏ.எஸ்.பி.) பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.